விலை: 30.00

பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii



E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk



டிஷ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4179)*



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 03 சனிக்கிழமை (20.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305


## வாள்வெட்டுக் குழுவினர் சாவகச்சேரியில் அட்டகாசம்

### இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -உதயசூரியன் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4.30மணிக்கு பத்துக்கு மேற்பட்ட நபர்கள் வாள்கள், கொட்டன்கள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்து அட்டகாசத்தில் ஈடுபட்டதுடன் இருவரை தலையில் வெட்டியும் தாக்கியும் காயப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரி உதயசூரியன் கிராமத்தில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இரு தரப்பினருக்கு இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

அந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய குழுவினர் 24

## ஜனாதிபதி மைத்திரியை கொல்ல றோ திட்டம் தீட்டியது உண்மையே!

### த ஹிந்து பத்திரிகை தெரிவிப்பு

(சென்னை)

இந்திய உளவுப் பிரிவான றோ. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை படுகொலை செய்ய சதித் திட்டம் தீட்டுவதாக அமைச்சரவையில் பேசப்பட்ட செய்தி ஊர்ஜிதம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது என த ஹிந்து பத்திரிகை அறிவித்துள்ளது.

ஹிந்து பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், த ஹிந்து குழும நிறுவனத்தின் தலைவருமான என்.ராம் டுவிட்டர் பதிவு ஒன்றின் மூலம் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரியை இந்திய உளவுப் பிரிவான றோ படுகொலை செய்ய முயற்சிக்கின்றது என்ற தலைப்பில் இந்த 24

# எதிர்கால அரசியல் தொடர்பில் வரும் 24-ம் திகதி அறிவிப்பேன்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்) எனது எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்பில் எதிர்வரும் 24-ம் திகதி நடைபெறவுள்ள தமிழ் மக்கள் பேரவை கூட்டத்தில் வெளிப்படுத்துவேன் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று அறிவித்துள்ளார்.



கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் எழுதிய இலங்கைத் தமிழ் அரசியல் இன மோதலும் மிதவாதமும் நூல் வெளியீடு நேற்று நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந் 23

## விக்னேஸ்வரன் தாக்கல் செய்த மனு நவம்பர் 8-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனுவினை எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் 24

## யாழில் வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

புத்தளத்திலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வழிப்பறிக்கொள்ளையில் ஈடுபட்டவரும் அவரது சகாவும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய் 24

போதைப் பொருள் தொடர்பில்

## மாணவர்களுக்கு தெளிவு வேண்டும்

### ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

பாடவிதானத்திற்கான அறிவைப் போன்றே சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் 23

## புலிகளின் ஆயுதங்களை பலர் பயன்படுத்தி வருகின்றனர்!

### கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக கொண்டுவரப்பட்ட ஆயுதங்களைப் பலர் பெற்றுக் கொண்டுள்ளதுடன், அந்த ஆயுதங்களையே, பாதாள உலகக் குழுவினர் பயன்படுத்தி வருவதாகவும். 23

## குளத்தில் தவறி விழுந்த பாடசாலை மாணவன் பலி

### வவு.ஈச்சங்குளம் பகுதியில் துயரம்

(மல்லாவி)

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வைரவ மூன்று முறிப்புக்குளத்தில் தவறி வீழ்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் குளத்தினுள் இருந்த அகழியில் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கல்மடுவில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 24

## யாழ். படைமுகாம்களை மாற்ற 100 கோடி தேவை

### அரசிடம் கோரினார் யாழ்.மாவட்ட கட்டளை தளபதி தர்ஷன கெட்டியாராட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள படைமுகாம்களை மாற்றியமைப்பதற்கு 100 கோடி ரூபாய் நிதியை, அரசிடம் கோரியுள்ளதாக பாதுகாப்பு படைகளின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி தர்ஷன கெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக அவரிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் பொது மக்களின் 23

## சோனியா, மன்மோகன், ராகுலுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் கலந்துரையாடல்

### இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவும் அழைப்பு



(டில்லி)

இந்து சமுத்திரத்தில் சுதந்திரமான கப்பல் போக்குவரத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை ஆரம்பித்துள்ள வேலைத்திட்டம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரம 23

முப்படையினர் விவசாயம் செய்யும்

## மக்களின் காணிகள் பற்றி ஆராய குழு நியமிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முப்படையினரால் விவசாய செய்கை மேற்கொள்ளப்படும் பொதுமக்களின் காணிகளை மீள கையளிப்பது தொடர்பில் ஆராய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரால் 4 பிரதான விவசாயப் பண்ணைகள் முன்னெடுக்கப்படுவதாக இராணுவ ஊடகப் பேச்சாளர், பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இந்த விவசாயக் காணிகளின் உரிமையாளர்கள் தற்போது உள்ளார்களா என்பது குறித்து 23

## நாலக டி சில்வாவிடம் நேற்றும் 9 மணி நேர விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவிடம் இரண்டாவது நாளாக நேற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 9 மணிநேர நேரம் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் 23

# இராணுவ வாகன தொடர் அணிகளால் வடமராட்சியில் பதற்றம்



(கரணவாய்)

வடமராட்சி பகுதி ஊடாக பயணித்த இராணுவ வாகன தொடர் அணிகளினால் வடமராட்சி பகுதியில் சிலமணி நேரம் பதற்றமான சூழ் நிலை காணப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை காலையில் இருந்து வல்லிபுரம் ஆனைவிழுந்தான், கிராமக்கோட்டுசந்தி, மந்திகை, புலோலி-சாவகச்சேரி வீதிகளில் இராணுவம், பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டு சந்திகளில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

முற்பகல் அளவில் அறுபது வரையான இராணுவ வாகனங்கள் அணிவகுத்து வந்தன.

பவள்கவசவாகனம், துருப்புக்காவிகள், றக் வண்டிகள், ஹெண்டயினர், அம்புலன்ஸ், பாரம் தூக்கிகள் என அறுபது வரையான வாகனங்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்த போது போக்குவரத்து பொலிஸார் சில இடங்களில் நின்று சந்திகளூடாக பயணித்த வாகனங்களை நிறுத்தியும், வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த கனரக வாகனங்களை அப்புறப்படுத்தினர்.

இதனால் பொதுமக்கள் வேடிக்கை பார்த்ததுடன் ஒரு அச்ச உணர்வும் ஏற்பட்டது.

இது தொடர்பில் இராணுவத்தினரை தொடர்பு கொண்டு கேட்ட போது இலங்கை இராணுவத்தினர் வெளிநாடுகளிற்கு அமைதிப்படையாக செல்ல உள்ளதாகவும் அதனால் அவர்கள் நேற்று மணற்காட்டு பகுதியில் இருத்து மந்திகை-சாவகச்சேரி ஊடாக மன்னாரை சென்றடைந்து அங்கிருந்து இன்று சனிக்கிழமை மன்னாரில் இருந்து குருநாகல் நோக்கி பயணிக்க உள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். (ம-60)

# இராணுவத்திடமிருந்த 82 சதவீத நிலங்கள் மக்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன

## சென்னையில் டி.எம்.சுவாமிநாதன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையின் வடக்கு பகுதியில் 28 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும், மாங்குளம் தொழில்பூங்காவாக மாறி வருவதாகவும் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் சுவாமிநாதன் நேற்று வெள்ளிக்கிழமை சென்னை விமான நிலையத்தில் இந்திய ஊடகவியலாளர்களை சந்தித்த போதே மேற்படி கூறியுள்ளார்.

இதன்போது மேலும் பேசிய அவர், இலங்கை மற்றும் தமிழக மீனவர்கள் ஒற்றுமையாகவே உள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இந்திய பிரதமர் மோடிக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.

இந்நிலையில் தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கை மீனவர்களின் சுமுகமற்ற நிலை தொடர்பில், ஊடகவியலாளர்கள் வினவியதற்கே அமைச்சர் மேற்படி கூறியுள்ளார்.

அத்தோடு இலங்கையின் வளர்ச்சி தொடர்பில் பேசிய அமைச்சர், தற்போது வளர்ச்சி திட்ட பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

அதன் ஒரு கட்டமாக, வடக்கில் 28 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இராணுவத்தின் வசமிருந்த தமிழர்கள் வாழும் பகுதியில், 82 சதவீத நிலங்கள் மீள ஒப்படைக்கப்பட்டு விட்டதாகவும் கூறினார்.

மேலும் ஏனைய காணிகள் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் விடுவிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்களிடம் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரக்பி வீரர் தாஜுதீன் படுகொலை

# சிராந்தியின் வாகனத்தை பகுப்பாய்வுக்கு உட்படுத்த நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை விவகாரத்தில் சி.ஐ.டி யினரால் வழக்கு பொருளாக முன்வைக்கப்பட்டுள்ள டிபெண்டர் வண்டியை அரச இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்த கொழும்பு மேலதிக நீதிவான் இசுறு நெத்திகுமார நேற்று உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி ராஜபக்ஷவின் சிரிலிய சவிய வேலைத்திட்டத்திற்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த குறித்த டிபெண்டர் வண்டியில் உயிரியல், வெடிபொருள் துகள்கள் அல்லது ஆடைகளின் துண்டுகள் எவையேனும் டிபெண்டர் வண்டிக்குள் உள்ளதா என்பதை கண்டறிய சீ.ஐ.டீ முன்வைத்த கோரிக்கையை ஏற்ற நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தற்போது சி.ஐ.டி பொறுப்பிலுள்ள குறித்த டிபெண்டர் வண்டியை அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி இந்த அறிக்கையை பெறுவதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# எரிபொருள் விலைச் சூத்திரம் இலங்கைக்கு பொருத்தமானதல்ல

## இப்படிக் கூறுகிறார் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

எரிபொருள் விலைச் சூத்திரம் இலங்கைக்கு பொருத்தமானதல்ல என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகிறார்.

நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இவ்வாறு பதில் அளித்துள்ளார்.

பொதுமக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையிலும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு நட்டம் ஏற்படாத வகையிலும் விலைகளை நிர்ணயிக்கும் முறையை உருவாக்குவது போதுமானது என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை எரிபொருள் விலை சூத்திரம் மக்களை ஏமாற்றுவதற்காக காண்பிக்கப்பட்ட ஒன்று என கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் ஷேஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதவிர எரிபொருள் விலை சூத்திரம் நியாயமான தர்க்க ரீதியான அடிப்படையில் இல்லை என்று பேராசிரியர் ரஞ்சித் பண்டார குறிப்பிடுகிறார். (ம)

## வவுனியாப் பகுதியில்

# வான்-முச்சக்கரவண்டி விபத்து மூவர் வைத்தியசாலையில்

(பனிக்கன்குளம்)

வவுனியா இரண்டாம் குறுக்குத்தெரு வீதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து இரண்டாம் குறுக்குத்தெரு வீதியூடாக பயணித்த வான் மீது நெல்லி ஸ்டார் ஹோட்டலுக்கு அருகே காணப்படும் நாற்சந்தியில் சூசைப்பிள்ளையார் குளம் வீதியிலிருந்து வந்த முச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-281)

**வீடு விற்பனைக்கு**

யாழ்.ரக்கா றோட் ரக்கா ஒழுங்கை 1/1இல் 3 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு.

**தொடர்புகள்: மணியம்**
**0764734160**

(6119)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**சதானந்தன் கருணானந்தன்**
(BSc, PGDE (merit), MEd (Second upper).

எமது பாடசாலையில் உதவி அதிபராகக் (தரம்-III) கடமையாற்றிய **திரு.சதானந்தன் கருணானந்தன்** 20.06.2018 முதல் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்கு (தரம் III கணிதம்) பதவியுயர்வு பெற்றுச் சென்றமையை பாராட்டி வாழ்த்துவதில் கல்லூரிச் சமூகம் அகமகிழ்வடைகிறது. கல்விப்புலத்தில் மேலும் பல பதவிநிலைகளை அடையவும் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**பணியாளர் நலன்புரிச் சங்கம்,**
**யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி,**
**வல்வெட்டித்துறை.**

(அ-4189)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# பணிப்பாளர் சபையை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைகளை கலைக்கும் அதிகாரம் தமக்கே உள்ளது என பொது நிறுவனங்கள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த பணிப்பாளர் சபைகளை மறுசீரமைப்பது தொடர்பில் ஜனாதிபதி தன்னிடம் எழுத்து மூலம் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகிய நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவின் கீழும், இலங்கை முதலீட்டு சபை, அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவின் கீழும் உள்ளன.

இந்நிலையில் குறித்த பணிப்பாளர் சபைகள் கலைக்கப்பட்டதாக ஊடகங்கள் வெளியிடும் செய்தி பொய்யானது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (ம)

# எரிபொருள் சூத்திரம் ஏமாற்று வித்தை

## எரங்க குணசேகர

நல்லாட்சி அரசாங்கம் அறிமுகம் செய்துள்ள எரிபொருள் விலைச் சூத்திரம் வெறுமனே ஏமாற்று வித்தையாகும் என சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகர தெரிவித்தார்.

நாட்டுக்கு அறிமுகம் செய்த எரிபொருள் விலைச் சூத்திரத்தின்படி இந்த மாதம் அறிமுகம் செய்த புதிய எரிபொருள் விலை சிக்கலாகவுள்ளது. சாதாரண டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றின் விலை அதிகரிக்கவில்லை.

ஒரு பொருளுக்கான விலைச் சூத்திரம் ஒன்று இருந்தால், அதேவகையான பொருள் ஒன்றின் விலை அதிகரித்து இன்னுமொன்றின் விலை அதிகரிக்காமல் இருக்க முடியாது.

இந்த சூத்திரம் அமைச்சர் மங்கள சமரவீரவினால் புதிதாக தயாரிக்கப்பட்ட ஒன்று அல்லவெனவும், 2003ஆம் ஆண்டு போடப்பட்ட ஒன்று எனவும் எரங்க குண சேகர மேலும் குறிப்பிட்டார். (ம)

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கல்கமுவ, பலுகன்தேவ பகுதியில் காட்டு யானை தாக்கியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்கமுவ, பலுகன்தேவ பகுதியை சேர்ந்த 49 வயதுடைய பிரேமதிலக என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் தனது தாயுடன் வீட்டில் இருந்த வேளையில் தோட்டத்தில் ஏதோ சத்தம் கேட்பதாக தெரிவித்து வீட்டில் இருந்து வெளியிறங்கிய போதே அவர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் கல்கமுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கல்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# படுகொலை செய்யப்பட்ட நிமலராஜனின் நினைவேந்தல் யாழில் அனுஷ்டிப்பு








(படங்கள்:-பொ.சோபிகா)

(யாழ்ப்பாணம்)


படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 18 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழில் இடம்பெற்றது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில்,நேற்று பிற்பகல் 3 மணிக்கு ஊடகவியலாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் மலர் தூவி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்துஊடக அமையத்தில் நிமலராஜனின் நினைவேந்தல் நினைவுகள் நடைபெற்றன.

2000 ஆம் ஆண்டின் ஒக்டோபர் 19ஆம் திகதி இரவு யாழ்.குடாநாட்டின் முன்னணி ஊடகவியலாளர் நிமலராஜன் தனது வீட்டில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட வேளையில் கூட தான் பணியாற்றிக் கொண்டிருந்த ஊடகங்களிற்கு செய்திகளை அறிக்கையிட்டுக் கொண்டிருந்த போதே சுடப்பட்டிருந்தார். அவரது தந்தை மற்றும் மருமகன் ஆகியோர் படுகாயப்படுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7-9)

## ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவுதினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிப்பு




(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவு தினம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக் கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள், ஆகியோர் அஞ்சலி செலுத்தியதுடன் விரிவுரையாளர் கலாநிதி ரகுராம் அஞ்சலி நினைவுரையாற்றியிருந்தார். (7-9)

## "பின்னணியில் 'றோ' இல்லை"

# கைது செய்யப்பட்ட இந்தியர் தொடர்பில் விசாரணையை துரிதப்படுத்த வேண்டும்

## ஸ்ரீல.சு.க. பொதுச் செயலாளர் பியதாஸ வலியுறுத்து



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான கொலை சதித்திட்டத்தின் பின்னணியில் றோ அமைப்பு இல்லை எனத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் உட்பட சம்பந்தப்பட்ட அனைவர் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் துரிதப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையுடன் சகல துறைகளிலும் நட்புறவைப் பேணும் நாடுகளில் ஒன்றாக இந்தியாவும் காணப்படுகின்றது.

இந் நட்புறவை சிதைக்கும் வகையில் இவ்வகையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம்.

எனினும் அதற்கு வாய்ப்பளிக்காது ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். இதனை மேலும் வளர்க்காது ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள நபர் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் துரிதப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாசவிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான கொலை சதித்திட்டம் தொடர்பாக சுதந்திர கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (7)

## 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

# ரவீந்திர விஜேகுணவர்த்தனவை கைது செய்ய காரணிகள் உள்ளன

## குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தகவல்



(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ரவீந்திர விஜேகுணவர்த்தனவை அடுத்த வாரத்திற்குள் குற்றப்புலனாய்வு பிரிவிற்கு அழைப்பதற்கு அழைப்பாணை தயாரிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் குற்றப்புலனாய்வு திணைக்களம்இதனை தெரிவித்துள்ளது.

இதேவேளை பாதுகாப்பு படைகளின் பிரதானி ரவீந்திர விஜேகுணவர்த்தனவை கைது செய்வதற்கு தேவையான காரணிகள் இருப்பதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் 11 இளைஞர்களைக் கடத்தி காணாமல் செய்தமை தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையிலேயே குற்றப்புலனாய்வு பிரிவினர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளனர். (7)

## கோத்தாவிற்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 07 பேருக்கு எதிரான வழக்கு விசாரணை நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணையானது நேற்று வெள்ளிக்கிழமை விசேட மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

டீ.ஏ. ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு 90 மில்லியன் ரூபாய் அரச நிதியைப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதனை அடுத்து முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 07 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை, கோத்தா உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான குறித்த விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் நாளாந்தம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென கடந்த விசாரணையின் போது விசேட மேல் நீதிமன்றில் தீர்மானிக்கப்பட்ட நிலையில், அவர் நேற்று விசேட மேல் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# கிண்ணம் வென்றது பாக்.,


வெற்றிக் கிண்ணத்துடன் பாகிஸ்தான் அணியினர்

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அபு தாபியில் நடந்த 2ஆவது டெஸ்டில் 373 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, 1-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி கிண்ணம் வென்றது.

ஐக்கிய அரபு எமிரேட்ஷ் (யு.ஏ.இ.) சென்றுள்ள பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா அணிகள், அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றன.

டுபாயில் நடந்த முதல் டெஸ்ட் சமனிலையான நிலையில் 2ஆவது டெஸ்ட் அபு தாபியில் நடந்தது. முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 282, அவுஸ்திரேலியா 145 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாவது இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 400 ஓட்டங்கள் குவித்து 'டிக்ளேர்' செய்தது.

பின், 538 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி, நேற்று முன் தினம் 3ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 47 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பின்ச் (24), ஹெட் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**அபாஸ் அசத்தல்**

நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணிக்கு மொஹமட் அபாஸ் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' டிராவிஸ் ஹெட் (36), மிட்சல் மார்ஷ் (5), ஆரோன் பின்ச் (31), அணித் தலைவர் ரிம் பெய்ன் (0) வெளியேறினர். யசிர் ஷா 'சுழலில்' மிட்சல் ஸ்டார்க் (28), பீற்றர் சிடில் (3) சிக்கினர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த மார்னஸ் (43), மொஹமட் அபாஸ் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஹொலன்ட் (3), யாசிர் ஷாவிடம் சரணடைந்தார். காயம் காரணமாக உஸ்மான் கவாஜா துடுப்பாட்டம் செய்யவில்லை.

இரண்டாவது இன்னிங்சில் 164 ஓட்டங்களுக்கு சுருண்ட அவுஸ்திரேலிய அணி 373 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. நேதன் லயன் (6) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் மொஹமட் அபாஸ் 5, யாசிர் ஷா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதனையடுத்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி 1-0 எனக் கைப்பற்றி கிண்ணம் வென்றது. ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை பாகிஸ்தானின் மொஹமட் அபாஸ் கைப்பற்றினார்.


மொஹமட் அபாஸ்

**10 விக்கெட்டுக்கள்**

'வேகத்தில்' மிரட்டிய பாகிஸ்தானின் மொஹமட் அபாஸ் இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 10 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதன்மூலம் இவர், முதன்முறையாக டெஸ்ட் அரங்கில் ஒரு போட்டியில் 10 அல்லது அதற்கு மேல் விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். இதற்கு முன் கடந்த மே மாதம் டப்ளின் நகரில் நடந்த அயர்லாந்துக்கு எதிரான டெஸ்டில் 9 விக்கெட்டுக்களை வீழ்த்தி இருந்தார்.

தவிர, 2006க்கு பின் டெஸ்ட் போட்டி யில் 10 அல்லது அதற்கு மேல் விக்கெட் வீழ்த்திய பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளரானார் அபாஸ். கடைசியாக 2006ல் கண்டியில் நடந்த இலங்கைக்கு எதிரான டெஸ்டில் ஆசிப் 11 விக்கெட்டுக்களை வீழ்த்தி இருந்தார்.

**இமாலய வெற்றி**

அபு தாபி டெஸ்டில் அசத்திய பாகிஸ்தான் அணி, டெஸ்ட் அரங்கில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிறந்த வெற்றியை (373 ஓட்ட வித்தியாசம்) பதிவு செய்தது. இதற்கு முன், 2014ல் நடந்த அபு தாபி டெஸ்டில் அவுஸ்திரேலியாவை 356 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பாகிஸ்தானின் இமாலய வெற்றியாக இருந்தது.

**17 விக்கெட்டுக்கள்**

இத்தொடரில் பாகிஸ்தானின் மொஹமட் அபாஸ், 17 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார். இதன்மூலம் இத்தொடரில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்களுக்கான பட்டியலில் முதலிடம் பிடித்தார்.

அடுத்த இடத்தில் அவுஸ்திரேலியாவின் நேதன் லயன் (12 விக்கெட்) உள்ளார்.

# பத்தாயிரம் படையில் ஹோலி, தோனி

## ஒரு நாள் தொடரில் சாதிக்க வாய்ப்பு



இந்தியா, மே.தீவுகள் அணிகள் மோதும் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நாளை கவுகாத்தியில் ஆரம்பமாகிறது. இதில் அணித் தலைவர் ஹோலி, 'சீனியர்' தோனி புதிய சாதனை படைக்க காத்திருக்கின்றனர்.

இந்தியா சென்றுள்ள மே.தீவுகள் அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நாளை கவுகாத்தியில் பகலிரவு போட்டியாக (மதியம் 1:30 மணி) நடக்கிறது. சமீபத்தில் ரோகித் தலைமையில் ஆசிய கிண்ணத் தொடரில் சம்பியன் ஆன இந்திய அணிக்கு இம்முறை தலைவராக ஹோலி களமிறங்குகிறார். இதில் பல சாதனைகள் படைக்க காத்திருக்கிறார்.

வரும் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் ஹோலி இன்னும் 187 ஓட்டங்கள் எடுக்கும் பட்சத்தில்,மே.தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் ஆகலாம். முதலிடத்தில் தற்போது சச்சின் (1,573 ஓட்..) உள்ளார். அதேநேரம் 221 ஓட்டங்கள் எடுத்தால் ஒருநாள் அரங்கில் 10,000 ஓட்டங்களை எட்டிய நான்காவது இந்திய வீரர் என்ற பெருமை பெறலாம். இதுவரை 211 போட்டிகளில் 9,779 ஓட்டங்கள் எடுத்துள்ளார். தவிர இதற்கு முன் சச்சின் (18,426 ஓட்..), கங்குலி (11,221), டிராவிட் (10,768) இந்த இலக்கை எட்டிஉள்ளனர்.

**தோனி '51'**

இதேபோல 'சீனியர்' விக்கெட் காப்பாளர் தோனி, இதுவரை களமிறங்கிய. 324 ஒருநாள் போட்டிகளில் 9,949 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இத்தொடரில் 51 ஓட்டங்கள் எடுக்கும் பட்சத்தில் இவரும் 10,000 ஓட்டங்களை கடந்த இந்திய வீரர் என சாதனை படைக்கலாம். மாறாக 101 ரன்கள் எடுத்தால் மே.தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் அரங்கில் 1000 ஓட்டங்கள் எடுத்த வீரர் ஆகலாம்.

தவிர இலங்கை, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தானுக்கு அடுத்து 5வது அணிக்கு எதிராக இந்த இலக்கை எட்டிய வீரர் என்ற பெருமையும் பெறலாம். ஆரம்ப வீரர் ரோகித் சர்மாவை பொறுத்தவரையில் 170 ஓட்டங்கள் எடுத்தால் மே.தீவுகள் அணிக்கு எதிராக 1000 ஓட்டங்கள் எடுத்த வீரர் பட்டியலில் இணையலாம்.

# மரண அறிவித்தல்



## நல்லையா சிவபரன் (கண்ணன்)

(உரிமையாளர் - வேல் முருகன் ரேடர்ஸ்)

சத்திரந்தை களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும், 47, சிவன் புது வீதி, திருநெல்வேலியை (நல்லூர் பாரதி சிலையடி) வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சிவபரன் (கண்ணன்) அவர்கள் நேற்று (19.10.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**47, சிவன் புது வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கான உதவி வழங்கல்



யாழ்ப்பாண பாதுகாப்புப் படைக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் ஆலோசனைக்கு அமைவாக யாழ்.தொல்புரம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கான உதவி வழங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் தொல்புரம் மத்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள் 20 பேருக்கான பாதணிகளும் முன்பள்ளி மாணவர்களுக்கான புத்தகப்பைகள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் என்பனவும் 10 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருட்களும் 15 முதியவர்களுக்கான உடைகள் என்பனவும் பாதுகாப்புப் படைக் கட்டளைத்தளபதியால் வழங்கி வைக்கப்பட்டன. (7-9)

# மைத்திரி-கோத்தா இணைவு ஒருபோதும் சாத்தியமில்லை

## ஜனாதிபதி ஆலோசகர் ஷிரால் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் போட்டியிடமாட்டாரென ஜனாதிபதியின் ஆலோசகர் ஷிரால் லக்திலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால அவ்வாறு செயற்படுவதற்கு ஒருபோதும் வாய்ப்பில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்தவகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில். மைத்திரிபால சிறிசேன தொடர்பாக பொய்யான கற்பனை கதைகளே முன்வைக்கப்பட்டு வருவதாகவும் அதில் எந்தவொரு உண்மையும் இல்லையெனவும் ஷிரால் லக்திலக்க சுட்டிக்காட்டியுள்ளார். (7)

### மண்ணெண்ணெய் அருந்திய குழந்தை வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் கடந்த புதன்கிழமை காலை ஒன்றரை வயது ஆண் குழந்தை ஒன்று தவறுதலாக மண்ணெண்ணெய் அருந்திய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

நீர் என நினைத்து மண்ணெண்ணெய் போத்தலை எடுத்து அருந்தியதால் இவ் விபரீதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (7-30)


## NVQ சான்றிதழ் வழங்கும் நிகழ்வு
## வல்வெட்டித்துறை நிலையம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வல்வெட்டித்துறை நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சம்பந்தமாக நேற்றைய (19.10.2018) விளம்பரம் பற்றிய மேலதிக தகவல்கள் வருமாறு:

**நிகழ்வு நடைபெறும் இடம்: வல்வை நகர மண்டபம் (மரக்கறிச் சந்தை மேல்மாடி)**

**காலம்:21.10.2018** (ஞாயிற்றுக்கிழமை)

**நேரம்: பிற்பகல் 2.00 மணி**

**தொடர்புகளுக்கு: 077 306 8750, 077 822 3632**


(சி-4188)

## மதசார்பற்ற இலவச சேவை, இரகசியம் காப்போம், நம்பிக்கை இழக்க வேண்டாம்

உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.
எந்த துயரமாயினும், அழையுங்கள், அல்லது நேரில் வாருங்கள்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**
**யாழ்ப்பாணம்- 077 900 8776**
**(தினமும் மு.ப. 9.00-பி.ப. 1.00)**

(6117)


# இராசி பலன்

**மீனம்:** சயன சுகக் குறைவான நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

**மேடம்:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**கும்பம்:** போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | இராசி பலன் | | ராகு |
| செவ். கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ஆயிலியம் | | |
| சனி | குரு | சூரி.புத. சுக் | |

**20.10.2018**
ஐப்பசி 03, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 7.45 மணிவரை
சதயம் முழுவதும்
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**கடகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், திருடர் பயமுண்டு, உடல்நலனில் கவனம் தேவை, முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**மகரம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைய வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** சுபகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்:** வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

# வலிகளை தாங்கியவர்களை வாழ வழி செய்ய வேண்டும்

## யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடுக்களையும் வலிகளையும் தாங்கிய அரசியல் கைதிகளை வாழ வழி செய்ய வேண்டும் என யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

சிறையில் நீண்டகாலமாக விசாரணை இன்றி வாடுகின்ற அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களைத் தொடர்ந்து சிறையில் தடுத்து வைத்திருப்பது மனிதாபிமானம் அற்றது மட்டுமல்ல நல்லிணக்கத்திற்கும் பாதகமானது.

வாழ்ந்த காலத்திலும் வடுக்களையும் வலிகளையும் சுமந்த இவர்கள் நிம்மதியாக வாழ வேண்டிய காலத்திலும் சிறைக்குள் வாடிக் கொண்டிருப்பது வேதனைக்குரியதாகும். நல்லாட்சி மலர்ந்தது என்று மகிழ்ச்சியை எதிர்பார்த்திருந்த இவர்களுடைய கனவுகள் தவிடு பொடியாகியுள்ளது.

யுத்தம் முடிந்து பல ஆண்டுகளைக் கடந்த போதும் அதன் பெயரால் பல குடும்பங்கள் சீரழிவதை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். அரசியல் கட்சிகள் உங்கள் முழுப் பலன்களையும் பிரயோகித்து பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு காணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஜனாதிபதி அவர்களே! மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி பொது மன்னிப்பின் அடிப்படையில் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். இதுவே நிரந்தரமான அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தி தரவல்லது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-9)

## திறப்பு விழா நிகழ்வு

(சாவகச்சேரி)

தூர் வாரி புனரமைக்கப்பட்ட நுணாவில் குளத்தின் புனருத்தாரண நிகழ்வும் அதனுடன் இணைந்த புதிய வீதி திறப்பு விழாவும் நாளை மறுதினம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் மற்றும் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அங்குரார்ப்பண நிகழ்வுகளைத் தொடர்ந்து நுணாவில் முருகன் ஆலய முன்றலில் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (7-9-30)


## மலையக மக்களின் சம்பள பிரச்சினைக்கு ஆதரவாக நாளை யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை 1000 ரூபாயாக நிர்ணயம் செய்ய வலியுறுத்தி "உரிமைக்காய் போராடும் தோட்டத் தொழிலாளர்களுடன் நாமும் கைகோர்ப்போம்" எனும் தொனிப்பொருளில் அறவழிப் போராட்டம் ஒன்று நாளை (21.10.2018) காலை 9.30 மணிக்கு யாழ்.பேருந்து நிலைய முன்றலில் முன்னெடுக்கப்படவுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்காய் வடக்கில் இருந்து உரிமைக் குரல் கொடுக்கும் நோக்கில் சமூக வலைத்தள நண்பர்களினால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (7-9-89)

## புதுப்பொலிவு பெற்ற சாவகச்சேரி பஸ் தரிப்பிடம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பஸ் தரிப்பிடத்தை தனியார் ஒருவர் நகரசபையின் அனுமதியுடன் பொறுப்பேற்று வர்ணம் பூசி அழகுபடுத்தியுள்ளார்.

சாவகச்சேரி பஸ் தரிப்பிடத்தில் அதிகளவான சுவரொட்டிகள், விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

தற்போது அவை அனைத்தும் அகற்றப்பட்டு குருத்துப் பச்சை நிறம் பூசப்பட்டு புதுத் தோற்றப் பொலிவுடன் காணப்படுகிறது. (7-9-30)

## 'ஆரோக்கிய வாழ்வும் யோகாவும்' கருத்தரங்கம்



(சாவகச்சேரி)

வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு "ஆரோக்கிய வாழ்வும் யோகாவும்" என்ற கருத்தரங்கம் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு இடம்பெற்றது.

சாவகச்சேரி பொது நூலகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த யோகா பயிற்சி மற்றும் கருத்தரங்கில் வாசகர்கள் மற்றும் நகரசபை செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த செயலமர்வில் வளவாளராக நகர சபையின் ஆயுள் வேத வைத்தியர் செயற்பட்டார். (7-9-30)

## விஷக்கடிக்கு இலக்கான ஐவர் வைத்தியசாலையில் அனுமதி

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த இரு தினங்களில் ஐந்து பேர் விஷக்கடிக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீசாலையைச் சேர்ந்த ந.தங்கராசா (வயது-62) குளவிக் கொட்டிற்கு இலக்கான நிலையிலும், கெற்பேலி மிருசுவிலைச் சேர்ந்த ச.மதுஷா (வயது-19), கொடிகாமத்தைச் சேர்ந்த த.செல்வராங்கன் (வயது-33), மீசாலை கிழக்கு வேம்பிராயைச் சேர்ந்த ம.ஜசிந்தன் (வயது-32) , சரசாலை வடக்கைச் சேர்ந்த ச. தனுஸ்காந் (வயது-11) ஆகியோர் இனந்தெரியாத விஷக்கடிக்கு இலக்கான நிலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது பருவ மழைக் காலம் ஆரம்பித்திருப்பதால், வயலில் விதைப்பு மற்றும் மருந்து, உரம் விசிறல் ஆகியன இடம்பெறுவதாலும் விஷ ஜந்துக்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-30)

## இலவச கருத்தரங்கு


(யாழ்ப்பாணம்)


தலைமைத்துவம், தொடர்பாடல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் **Toastmasters International** நிறுவனத்தின் சேவைகளை விபரிப்பதற்கான தெளிவூட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8.30 முதல் 12 மணிவரை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.


கருத்தரங்குக்கான அனுமதி இலவசம் என்பதுடன் மேலதிக விபரங்களை குறித்த நிறுவனத்தின் உபதலைவர் ஸ்ரீபாலறமணனுடன் 077 489 6046 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள முடியும். (7-9)



துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலையில் அமைக்கப்பட்ட திறந்த வெளியரங்கு, கணனி அறை, திறன்வகுப்பறை ஆகியவற்றின் திறப்புவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் பாடசாலை அதிபர் சி.லிங்கனதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர்களான வி.சிவயோகன், க.தர்மலிங்கம், மற்றும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார், பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர்களான இ.நாகேந்திரராஜா, ஞா.தர்ஷன், நா.பாலரமேஸ், கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணி, கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய அதிபர் சி. சிவகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)







நல்லூர் கந்தசுவாமி கோயில் நவராத்திரி கும்ப பூஜை (சரஸ்வதி பூஜை) இறுதி நாளான நேற்றுக் காலை மானம்பூ உற்சவம் (வாழைவெட்டு இடம்பெற்றது.
**(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)**

# மகளிர் சிவில் வலய அமைப்பினால் நுண்கடன் தொடர்பில் மகஜர் கையளிப்பு



அரசால் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நுண்கடன் திட்டத்தில் கொண்டு வந்த சலுகை கிளிநொச்சி மாவட்டத்திற்கு திருப்தி அளிக்கவில்லை எனவும், இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றில் பேசி மாவட்டத்தில் நுண்கடனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்குமாறு தெரிவித்து சிவில் வலய அமைப்பின் பிரதிநிதிகளால் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்திற்குச் சென்ற சிவில் வலய அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் மகஜரை கையளித்தனர். மகஜரை பெற்றுக் கொண்ட சிறிதரன் எம்.பி. தெரிவிக்கையில்.

இவ்விடயம் தொடர்பில் ஏற்கனவே பாராளுமன்றில் பேசியதாகவும், கிழக்கில் 40 இற்கு மேற்பட்டவர்கள் தற் கொலை செய்துள்ளதாகவும். அதேபோன்று வடக்கிலும் 49 இற்கு மேற்பட்ட தற்கொலை முயற்சிகள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் இவ்விடயம் தொடர்பில் அரசினால் தீர்வு முன் வைக்கப்பட்ட போதிலும் நடைமுறைக்குவரவில்லை. இவ்விடயம் தொடர்பில் அரசிடம் வலியுறுத்துவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் தமிழரசுக் கட்சி தலைவர் கடந்த 17 ஆம் திகதி இறுதியான முடிவு எடுக்கப்படும் என தெரிவித்திருந்தார். ஆனால் எதுவும் எட்டப்படவில்லை என அவரிடம் வினவியபோது,

கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் பாதுகாப்பு ஆலோசனை கூட்டத்தில் இவ்விடயம்தொடர்பில் தலைவர் சம்பந்தனினால் முன் வைக்கப்பட்டது.

குறித்த விடயம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக நடவடிக்கை எடுத்தால் சிங்கள மக்கள் மத்தியில் குழப்பமான சூழல் ஏற்படும். இந்த நிலையில் அவர்களை அரசியல் கைதிகள் என்ற வகையில் விடுவிப்பது கடினம். நீதிமன்ற நடவடிக்கை ஊடாக விடுவிப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் பேசப்பட்டது, எனினும் பிரதமர் நாட்டில் இல்லை என்பதால் இவ் விடயம் தொடர்பில் உடனடியாக தீர்மானம் எட்டப்படாத நிலை காணப்பட்டதாகவும், அவர் நாடு திரும்பியதும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் அவர் தெரிவித்தார். எனினும் நீதிமன்ற நடவடிக்கை ஊடாக அவர்களை விடுதலை செய்வதென்பது உடனடியாக சாத்தியமற்றது எனவும், அதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.(2)

# ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் ஆட்சிபீடமேற கனவிலும் நினைக்க வேண்டாம்

## நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

மக்கள் விடுதலை முன்னணியின் துணையுடன் மீண்டும் ஆட்சி பீடம் ஏறி விடலாம் என்று ராஜபக்ஷ குடும்பம் கனவில் கூட நினைக்கக்கூடாது என தெரிவித்த ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடைக் கால அரசாங்கத்திற்கு துணை நிற்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். பொது எதிரணியின் தலைமைத்துவத்திற்காக பல்வேறு சூழ்ச்சிகள்முன்னெடுக்கப்படுகின்றன.

இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கி மகிந்த ராஜபக்ஷவை நெருக்கடிக்குள்ளாக்கி, கோத்தபாய ராஜபக்ஷவை அரசியல் ரீதியில் முன்னிலைப்படுத்தி, பசில் ராஜபக்ஷவை பொதுஜன பெரமுனவில் இருந்து முழுமையாக வெளியேற்றுவதே இடைக்கால அரசாங்கத்தினை உருவாக்க முயற்சிப்பவர்களின் அரசியல் இராஜதந்திரம் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமாயின் பொதுஜன பெரமுனவுடன் மக்கள் விடுதலை முன்னணியினர் இணைய வேண்டும் என்று பொதுஜன பெரமுன குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# கைது செய்யப்பட்ட சுதந்திர கட்சியின் அமைப்பாளருக்கு விளக்கமறியல்

சட்ட விரோத துப்பாக்கிகளுடன் நேற்று கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாவனல்லை தொகுதி அமைப்பாளர் இம்தியாஸ் காதரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி அவரை நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கேகாலை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்ட விரோத துப்பாக்கிகளை வைத்திருந்தமை தொடர்பில் சுதந்திர கட்சியின் மாவனல்லை தொகுதி அமைப்பாளர் இம்தியாஸ் காதர் நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L / கனடா PR<br>தொ.இ: B/8998 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 33 செவ் 1 இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்:B.COM<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/1680 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:Software Engineer / தனியார்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/8999 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 56 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:M.Ed/ஆசிரியர்<br>தொ.இ: G/1683 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 19<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்: A/L /அரசவேலை<br>தொ.இ: B/9000 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 21சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:M.Ed/ஆசிரியர்<br>தொ.இ: G/1684 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 17 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில்<br>தொ.இ: B/597 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 90 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/1698 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வடக்கு,கிழக்கில் செயலிழந்த கைத்தொழிற்சாலைகள் அடுத்தாண்டில் மீளவும் ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம்

## பரந்தனில் அமைச்சர் றிசாத் பதியுதீன் உறுதி



(பரந்தன்)

**வடக்கு,கிழக்கில் செயலிழந்துள்ள கைத்தொழிற்சாலைகளை அடுத்தாண்டில் மீள ஆரம்பிப்பதற்கு, கைத்தொழில் மற்றும் வர்த்த அமைச்சுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் தான் சமர்ப்பித்த பத்திரத்துக்கு அனுமதி கிடைக்கப் பெற்றிருப்பதாகவும், இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மூடப்பட்டிருக்கும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கு, வெளிநாட்டு சூழலியல் நிபுணர்கள் மற்றும் உள்நாட்டு சூழலியலாளர்கள் ஆகியோருடன் நேற்று முற்பகல் 10 மணியளவில் விஜயம் செய்த அமைச்சர், தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான கள நிலவரங்களைப் பார்வையிட்ட பின்னரே. இந்த விடயத்தை தெரிவித்தார்.




"நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்த சூழ்நிலையினால் பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் 50 ஏக்கர் காணி, இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கி அவர்களின் வசமிருந்தது. இராணுவ உயர்மட்டத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விளைவாக, தற்போது 15 ஏக்கருக்குள் அவர்கள் தமது இருப்பை சுருக்கியுள்ளனர், எனினும், இரசாயனத் தொழிற்சாலை முழுமையாக இயங்கும் போது, எஞ்சிய காணிகளையும் இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வோம்.

வடக்கில், காங்கேசன்துறையில் 300 ஏக்கர் பரப்பில் சூழல் நட்புறவான கைத்தொழில் பேட்டை ஒன்றை ஆரம்பிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. முதலாம் கட்டமாக 100 ஏக்கரில் இந்த திட்டத்தை ஆரம்பிப்போம். அத்துடன், முல்லைத்தீவில் ஓட்டுத் தொழிற்சாலை, குறிஞ்சாக் கேணியில் மீள உப்பு உற்பத்தி, முல்லைத்தீவு. கொக்காவிலில் டைட்டேனியம் ஒக்சைட்டு உற்பத்தி ஆகியவற்றை ஆரம்பிக்கவிருக்கின்றோம். அது மட்டுமன்றி, மட்டக்களப்பில் கடதாசித் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்போம். இவற்றை ஆரம்பிக்குமாறு பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், விஜயகலா மகேஸ்வரன், சி.சிறிதரன் ஆகியோர் தொடர்ச்சியான வேண்டுகோள்களை விடுத்து வருகின்றனர்.

அது மாத்திரமின்றி, கிழக்கில் உள்ள தொழிற்சாலைகளை மீள ஆரம்பிக்குமாறு, பிரதி அமைச்சர் அமீர் அலி உட்பட அந்த மாவட்ட எம்.பிக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனவே, தொழிற்சாலைகளை ஆரம்பித்து, வேலை வாய்ப்புக்களை உருவாக்குவோம். இதன்போது அந்தந்த பிரதேசங்களிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கே தொழில் வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும்.

ஆனையிறவில் உப்பு உற்பத்தியை மீள ஆரம்பித்துள்ளோம். மாந்தை சோல்ட்டனிலும் உப்பு உற்பத்தி திருப்திகரமான அடைவை எய்தி வருகின்றது. இறக்குமதி செய்யப்படும் உப்பு உற்பத்தியை நிறுத்தும் அளவுக்கு, நாம் எமது இலக்கை நோக்கி பயணிக்கிறோம்" இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (2-312)

## இராணுவத்தின் 69வது ஆண்டு பூர்த்தி; பயன்தரும் மரக்கன்றுகள் நாட்டல்



(மன்னார்)

இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி மக்கள் நலன் பெறும் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் மன்னார் பிரதேச இராணுவத்தினர் மன்னார் பேசாலை புனித பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தில் ஒரு தொகுதி பயன் தரும் மரக்கன்றுகளை நாட்டி வைத்துள்ளனர்.

குறித்த மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணியளவில் தள்ளாடி இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவு கேணல் ஜோச் ரணசிங்க தலைமையில் இடம்பெற்ற மரம் நடும் வைபவத்தில் பேசாலை இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் சுரேஸ் உட்பட பேசாலை உதவிப் பங்குத் தந்தை, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## வவுனியாவில் தமிழ்-சிங்கள கலாசார ஆற்றுகை நிகழ்வு

(குருமன்காடு)

வவுனியாவில் தமிழ்-சிங்கள கலாசார ஆற்றுகை நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா காமினி வித்தியாலயத்தில் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.



இதன்போது வலய மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த் தினப் போட்டி மற்றும் சிங்கள தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன், தமிழ், சிங்கள கலாசாரத்தை வெளிப்படுத்தும் மாணவர்களின் பல்துறை சார் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி.அன்னமலர் சுரேந்திரன், வவுனியா கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## முதியோர் தின நிகழ்வுகளை நடத்த விரும்புவோரின் கவனத்திற்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட முதியோர் தினவிழாவில் கலை நிகழ்ச்சிகளை நடத்த விரும்பும் முதியோர் மற்றும் முதியோர் சங்கங்கள் மாவட்ட கூட்டுறவாளர் மண்டப ஒழுங்கையில் உள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துடன் அல்லது 021 228 3363 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அல்லது பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த விழா வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினதும், மாவட்ட முதியோர் சங்கத்தினதும் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

அரை மணி நேரத்திற்குக் குறைந்த நேரமுள்ள தான கலை வடிவங்கள் நேர ஒழுங்கிற்கு ஏற்ப முதல் வருவதற்கு முதல் என்ற அடிப்படையில் முன்னுரிமை அடிப்படையில் நேர வரையறை கருதி சந்தர்ப்பம் வழங்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## எமது காணிகளை மீட்பதற்காக எவ்வளவு காலம் தெருவோரத்தில் இருக்கப்போகின்றோம்

### கேப்பாபிலவு மக்கள் ஆதங்கம்

(பனிக்கன்குளம்)

காணி விடுவிப்புக்காக தொடர்ச்சியாக குழந்தைகளுடன் வெயில் மழை பனி பாராது வீதியோரத்தில் நுளம்புக்கடிக்கு மத்தியில் எமது காணி விடுவிப்பு குறித்து அரசு பேசாது ஏனைய காணிகள் விடுவிப்பு தொடர்பில், விடுவிக்கப்பட்டுள்ள அறிவிப்பு அழுகின்ற குழந்தைக்கு பால் வழங்காது இருப்பது போன்றது என கேப்பாபிலவு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



இராணுவத்தினர் சுவீகரித்து வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்பு போராட்டம் 600 நாட்களை அண்மித்த நிலையில் கேப்பாபிலவு இராணுவத் தலைமையக வாயிலுக்கு முன்பாகத் தொடர்கின்றது.

இந்நிலையில் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் முகமாக நேற்று முன்தினம் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள், இந்த நல்லாட்சி அரசு காணி விடுவிப்புக்காக தொடர்ச்சியாக குழந்தைகளுடன் வெயில் மழை பனி பாராது வீதியோரத்தில் நுளம்புக்கடிக்கு மத்தியில் எமது காணி விடுவிப்பு குறித்து பேசாது ஏனைய காணிகள் விடுவிப்பு தொடர்பில் விடுவிக்கப்பட்டுள்ள அறிவிப்பு அழுகிற குழந்தைக்கு பால் வழங்காது இருப்பது போன்றது என் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இன்னும் நாங்கள் எத்தனை வருடங்கள் இதிலே வாழ்வது. இந்தக் காணியை மீட்பதற்காக எவ்வளவு காலம் தெருவோரத்தில் இருக்கப் போகிறோம். எமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. அதேநேரம் பிள்ளைகளின் உடல்நலமும் பாதிக்கப்படுகின்றது.

அத்துடன் எங்களுக்கும் தொடர்ந்து இந்த இடத்தில் இருந்து உடல்நலம் பாதிக்கப்படுகின்றது. சர்வதேசமும் இதனை பார்த்துக்கொண்டிருக்கிறது.

இன்று ஜனாதிபதியின் அறிவிப்பு காணிகள் முழுமையாக விடுவிப்பதாக காட்டிக்கொண்டு சொற்ப காணிகளை விடுவித்துவிட்டு ஜெனிவாவில் மார்ச் மாதம் நடக்கும் அமர்வில் சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கையாக இதைச் செய்யப்போகிறார் என்று தெரிவித்தனர்.

அத்தோடு விவசாய குடும்பங்களான எமது பாதிப்புக்கு உடனடி தீர்வை வழங்கவும் கோரியுள்ளனர். (2-281)



வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனது சிந்தனையில் உருவான தமிழரின் தொன்றுதொட்ட வாழ்வியலை பிரதிபலிக்கும் திறந்தவெளி அருங்காட்சியகத்துக்கான கருத்திட்டமான தமிழர் நாகரிக மையம் ஆரம்பப் பணிகள் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு முல்லைத்தீவு மாந்தை கிழக்கு அம்பாள்புரம் பகுதியில் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தயானந்தன், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், அமைச்சின் அதிகாரிகள், கலாசார, கல்வி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# ஆயிரத்து 670 போதை வில்லைகளுடன் வவுனியாவில் இரு இளைஞர்கள் கைது



(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை பொலிஸாரின் நடவடிக்கையின்போது ஆயிரத்து 670 போதை வில்லைகளுடன் திருகோணமலையைச் சேர்ந்த இரு இளைஞர்களைக்கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை பயணித்த தனியார் பேருந்தை ஓமந்தைப்பகுதியில் வழிமறித்த பொலிஸார் அதில் சென்ற இளைஞர்கள் இரு வரை சோதனைக்குட்படுத்திய போது சட்டவிரோத போதைவில்லைகளை தமது உடைமையில் வைத் திருந்த 23, 25 வயதுடைய திருகோணமலையைச் சேர்ந்த இருவரைக் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து ஆயிரத்து 670 போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இந்நடவடிக்கையின்போது ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா தலைமையில் சென்ற குழுவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற் கொண்ட பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஓமந்தைப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)




# தேக்கம் கிராம மாணவர்களின் நலன்கருதி பேருந்து சேவை



(மன்னார்)

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட "தேக்கம்" கிராம மாணவர்கள் தமக்கு உரிய முறையில் பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை எனவும் இதனால் தாம் தாமதித்தே பாடசாலைக்குச் செல்வதாகவும் கூறி குறித்த கிராம மாணவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் மன்னார்-மதவாச்சி பிரதான வீதி மாதா கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் பேருந்தை இடை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த மாணவர்களின் போராட்டத்தின் பலனாக நேற்று வெள்ளிக்கிழமை முதல் குறித்த மாணவர்களின் நலன் கருதி இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜீ.எம். சீலனின் முயற்சியினாலும் மடு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் முயற்சியினாலும் குறித்த பேருந்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# அரசசேவை ஓய்வூதியர்கள் நன்மதிப்புவிழா நவம்பரில்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர்கள் நன்மதிப்பு விழா நவம்பர் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி டிப்போச்சந்திக்கு அருகாமையிலுள்ள கூட்டுறவாளர் மண்டபத்தில் அ.சே.ஓ.ஊ.ந. நிதியத் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி கண்டாவளை பிரதேச செயலர் திருமதி.ஜெயராணி பரமோதயன், கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன், பூநகரி பிரதேச செயலர் ச.கிருஸ்ணேந்திரன், கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் வே.வேல்நிதி, கிளிநொச்சி உதவி மாவட்டச் செயலர் த.பிருந்தாகரன், கிளி.மா வட்டச் செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் ந.கௌரிதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மூத்த ஓய்வூதியர்களுக்கு தங்கப்பதக்கம் அணிந்து பொன்னாடை போர்த்தும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளரும் வடமாகாண சபை உறுப்பினருமாகிய ப.அரியரத்தினம் சிறப்புரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைத்து ஓய்வூதியர் சங்க அங்கத்தவர்களையும் தவறாது பங்கு பற்றுமாறு தலைவர் அ.கனகரத்தினம் அறிவித்துள்ளார். (2-254)

# பயன்தரும் மரக்கன்றுகளை பெற்றுக்கொள்ள தவறியோருக்கு


(சிவநகர்)

ஓய்வூதியர்களுக்கு மர நடுகை மாதத்தையொட்டி கமநல சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பயன்தரும் மரக்கன்றுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த மரக்கன்றுகளை பெற்றுக்கொள்ளத் தவறிய கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதிய அங்கத்துவமுடைய அனைவருக்கும் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி நகரத்திலுள்ள கம நலசேவைகள் திணைக்களத்தில் இப்பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

எனவே அங்கத்தவர்கள் இவற்றைப் பெற்றுப் பயன் பெறுமாறு கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர் சங்கத் தலைவர் சி.சந்திரராசா அறிவித்துள்ளார். (2-254)

# சிறுவர் பூங்கா திறந்துவைப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் பகுதியில் அமைந்துள்ள மதுசா முன்பள்ளியில் இராணுவத்தினரால் அமைக்கப் பெற்ற சிறுவர் பூங்கா நேற்றுக் காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் சிறார்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப்படைத் தலைமையகத்தின் முல்லைத்தீவு பாதுகாப்புப்பிரிவின் ஒத்துழைப்புடன் 68 ஆவது படைப்பிரிவு மற்றும் 683 ஆவது படைப்பிரிவு 7 ஆவது கெமுனு படைப்பிரிவு ஆகியன இணைந்து முல்லைத்தீவு தேராவில் பகுதியில் அமைந்துள்ள மதுசா முன்பள்ளிச்சிறார்களுக்கான சிறுவர் பூங்காவை அமைத்து வழங்கியுள்ளனர்.

68 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி மேஜர் ஜெனரல் எச்.ஆர்.என்.பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறுவர் பூங்காவைத் திறந்து வைத்தார்.

தொடாந்து முன்பள்ளிச் சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-315)

# வவுனியா வளாக முதல்வரின் பதவிக்காலம் நீடிப்பு

(குருமன்காடு)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரனின் பதவிக்காலம் மூன்று வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்தின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக செயற்பட்டு வரும் கலாநிதி ரி.மங்களேஸ்வரனின் சேவைக்காலம் அண்மையில் முடிவடைந்த நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரனினால் மூன்று வருடங்களுக்கான கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்தின் வளர்ச்சிக்கு பல்துறைகளினாலும் தனது பங்களிப்பை மேற்கொண்டு வரும் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் வவுனியா வளாகத்தை வன்னி பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு தன்னாலான முயற்சியை எடுத்து வரும் நிலையில் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (2-250)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2018-16.11.2018

## தொழில் வளர்ச்சி மேலோங்கும்!



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் சூரியன் நீச்சம் பெற்றிருக்கிறார். மேலும் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் சுக்கிரனோடு இணைந்து உலா வருவதால் நீசபங்க ராஜயோகம் ஏற்படுகின்றது. அதே நேரத்தில் குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. உங்களுக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் உச்சம் பெற்றுச் சந்திரனோடு இணைந்து சந்திர-மங்கள யோகத்தை உருவாக்குகிறார். குரு பகவான் அர்த்தாஷ்டம குருவாக வந்தாலும், அதன் பார்வை பலத்தால் பத்தாமிடம் புனிதமடைவதால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை வரவு திருப்தி தரும். சென்ற மாதத்தில் எதிர்பார்த்துக் காத்திருந்த சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர். நாணயப் பாதிப்பில் இருந்து விடுபடுவீர்கள். வாங்கியதைக் கொடுக்க முடியவில்லையே என்றும், கொடுத்ததை வாங்க முடியவில்லையே என்றும் கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது விமோசனம் பிறந்துவிட்டது. நல்லநேரம் தொடங்கிவிட்டது. தொழிலில் ஏற்பட்ட தொய்வுநிலை மாறும். பணியில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும். தேகத்தில் இருந்த நோய் விலகும். துணிந்து எடுத்த முடிவுகளால் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

குருவருளும், திருவருளும் கூடுதலாக இருக்கும் நேரமிது. எனவே அருளாளர்களின் வழிகாட்டுதலின் படி பொருள் வளத்தைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். வாதிடும் வழக்கில் இருந்து விடுபடுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். இடம், பூமி விற்பனையால் லாபங்கள் குவியும். கடன்களைக் கொடுத்து மகிழ்வதோடு காலாகாலத்தில் நடைபெறாமல் இருந்த காரியங்களையும் முடித்துக்காட்டுவீர்கள். பஞ்சம ஸ்தானத்தில் சனி இருப்பது நன்மைதான்.

மந்தன் எனப்படும் சனி 5இல் இருப்பதால், புத்திர ஸ்தானத்தில் உள்ள சனியின் இயக்கம் மந்த கதியில் இருக்கின்றது. எனவே பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள், கல்வி, உத்தியோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகளில் இதுவரை தாமதம் ஏற்பட்டிருக்கலாம். விருச்சிகத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது வீட்டில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

என்ன இருந்தாலும் இம்மாதம் ராகு-கேதுக்களுக்குள் கிரகங்கள் சிக்கியிருப்பதால், சர்ப்ப கிரக வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. சந்திர-மாங்கள யோகம் இருப்பதால் நிலவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது நல்லது. நீச்சம் பெற்ற சூரியனின் இயக்கத்தால் நன்மை கிடைக்க சூரியனார் கோவில் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. சரஸ்வதி பூஜையன்று கலைவாணி வழிபாடும், கந்தசஷ்டியன்று முருகப்பெருமான் வழிபாடும் செய்துவந்தால் சிந்தனைகள் அனைத்தும் வெற்றிபெறும்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். தனலாபாதிபதி புதன் 4ஆம் இடத்திற்கு வரும் பொழுது குடும்பத்தில் நடைபெற வேண்டிய காரியங்கள் நடைபெறும். சுபச்செலவுகள் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து வியக்கும் தகவல் வீடு வந்து சேரும். நம்பிக்கையும், நாணயமும் மிக்க நண்பர்கள் உங்களுக்கு நல்ல தகவல்களை வரவழைத்துக் கொடுப்பர். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கூடுதல் இலாபம் தொழிலில் கிடைக்கும். வாகனயோகம் முதல் வருமானம் பெருக்கம் வரை உருவாகும் நேரமிது.

**கும்பச் செவ்வாய் சஞ்சாரம்**




ஒக்டோபர் 27ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்களுக்கு யோகம் செய்யும் கிரகமாக விளங்கும் செவ்வாய் 4, 9 ஆகிய இடங்களுக்கு அதி பதியானவர். அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல வாய்ப்புகள் ஏராளமாக வந்து சேரும். நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். சொத்துகளால் ஆதாயம் கிடைக்கும். சொந்தங்களின் ஆதரவும் கூடும். முக்கியப்புள்ளி ஒருவர் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுப்பார். நடக்கும் தொழில் நீங்கலாக புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். புதிய பாதை பலப்படும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் இந்த நேரத்தில், இல்லத்திலும் அடுக்கடுக்காக நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

**புதன் வக்கிர இயக்கம்**

நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிரம்பெறுகிறார். தனலாபதிபதி புதன் வக்கிரம் பெறும் இந்த நேரத்தில் பணப் பற்றாக்குறை அதிகரிக்கும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். சில ஒப்பந்தங்கள் கைநழுவிச் செல்லலாம். சில ஒப்பந்தங்கள் திருப்தி அளிக்காது. இதுபோன்ற காலங்களில் சுய ஜாதக அடிப்படையில் தெசா புத்திக்கேற்ற வழிபாடுகளைச் செய்து வழிபடுவது நல்லது. இம்மாதம் ஞாயிறுதோறும் சிவன்வழிபாட்டை மேற்கொள்வதோடு சரஸ்வதி பூஜையன்று கலைவாணி வழிபாட்டையும், விஜயதசமியன்று துர்க்கை வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் ஆரோக்கியத் தொல்லை அகலும். ஆதாயம் தரும் தகவல்கள் வந்து கொண்டேயிருக்கும். தேவைப்பட்ட நேரத்தில் கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கனிவும், பாசமும் கூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கும் யோகமும், தொழில் தொடங்கும் யோகமும் கைகூடும். தாய் வழி ஆதரவும், சகோதர வழி ஆதரவும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். பணி புரியும் பெண்களுக்குப் பல நாட்களாக கண்ட கனவு இப்பொழுது நனவாகும். மேலிடத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கலைவாணி வழிபாடும், கந்தப் பெருமான் வழிபாடும் நன்மையை வழங்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## வளைந்து கொடுத்துச் செல்லுங்கள்!



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் தன ஸ்தானத்தில் சுக்கிரனோடு இணைந்திருக்கிறார். எனவே பணப்புழக்கத்திற்கு குறைவு ஏற்படாது. பாதியில் நின்ற பணிகள் இனி மீதியும் தொடரும். பொருளாதாரச் சரிவில் இருந்து மீளப் புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே எந்தக்கிரகம், எப்படி இருந்தாலும் தொழிலில் அதிகமாக உழைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லையே என்ற கவலை அடிக்கடி மனதை வாட்டும்.

இட மாற்றங்கள், வீடு மாற்றங்கள், இனிய மாற்றங்களாக அமையும். கடன் சுமையைக் கொடுத்து முடித்தோம் என்ற நிம்மதி ஏற்படாமல் மீண்டும் புதிய கடன்கள் முளைக்கத் தொடங்கும். தாய்வழி ஆதரவு, சகோதர வழி ஒத்துழைப்புகளெல்லாம் பேச்சளவில் கிடைக்குமே தவிர பெரியளவில் கிடைக்காது. இணைந்து பணிபுரிபவர்கள் எப்பொழுதும் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம்தான். பொறுப்புகளை அவர்களிடம் நீங்கள் ஒப்படைத்தால் மீண்டும் அது உங்களிடமே வந்து சேரும்.

அதுமட்டுமல்லாமல் அவர்கள் செய்த பிழையால் மேலிடத்தில் இருந்து உங்களுக்கு சிக்கல்கள் உருவாகலாம். எனவே எதையும் உங்கள் நேரடிப் பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லைகளும் அதிகரிக்கலாம். அப்போதைக்கப்போது காய்ச்சல், தலைவலி, ஜலதோஷம் என்று ஏதாவது ஒன்று வந்து கொண்டே இருக்கும். மூட்டுவலி, முதுகுவலி போன்றவற்றாலும் அவதிப்பட நேரிடலாம். எனவே மாற்று மருத்துவத்தை மேற்கொள்வதன் மூலமாகவே செய்யும் வைத்தியத்தை தொடர்ந்து செய்தோ நோய்களைக் குணமாக்கிக் கொண்டு செயற்பட முயற்சிப்பது நல்லது.

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் சகாய ஸ்தானத்தில் இப்பொழுது சஞ்சரிக்கிறார். அதன் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதாலும், 9, 11 ஆகிய இடங்களில் பதிவதாலும் குடும்பப் பிரச்சினைகள் ஓரளவு நல்ல முடிவிற்கு வரும். வீட்டில் சுபகாரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். வியாழன் தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள். சரஸ்வதி பூஜையன்று சரஸ்வதி தேவியையும், விஜய தசமியன்று பராசக்தியையும், சூரசம்ஹாரத்தன்று முருகப்பெருமானையும் வழிபட்டு வந்தால் வளர்ச்சியில் இருந்த பாதிப்புகள் அகலும்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

ஒக்டோபர் 24ஆம் திகதி உங்கள் இராசிநாதன் புதன் விருச்சிக இராசிக்கு வருகிறார். இராசிநாதன் சகாயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். இனிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். சகோதர வர்க்கத்தினர் பகைமாறிப் பாசம் காட்டுவர். பணிபுரியும் இடத்திலிருந்து பகை அகலும். உங்கள் உழைப்பிற்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். சுய தொழில் செய்பவர்களுக்கு பங்குதாரர்களால் ஏற்பட்ட பகை மாறும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கும்பச் செவ்வாய் சஞ்சாரம்**

ஒக்டோபர் 27ஆம் திகதி கும்ப இராசிக்கு




செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். 8இற்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது இனிய நற்பலன்கள் வந்து சேரும். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தெய்வீக சிந்தனை அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்துசேரும்.

**புதன் வக்கிர இயக்கம்**

நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் வக்கிரம் பெறுகிறார். இந்த வக்கிர காலம் ஒரு பொற்காலமாக அமையும். கேந்திராதிபத்ய தோஷம்பெற்ற கிரகம்வக்கிரம்பெறும் பொழுது யோகத்தை வழங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குதூகலப் பயணங்கள் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் புகழ், பாராட்டு குவியும். மேலிடத்து ஆதரவால் நற்பலன்கள் வந்துசேரும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் புதன்கிழமைதோறும் பெருமாள் வழிபாட்டையும், மகாலட்சுமி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் கூடுதல் விரயம் ஏற்படலாம். சேமிக்க முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். குடும்பப் பிரச்சினைகள் அடிக்கடி தலைதூக்கும். கணவன் - மனைவிக்குள் பிரச்சினைகள் உருவாகாமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பெற்றோர்களாலும், உற்றார், உறவினர்கள் மற்றும் சகோதர வர்க்கத்தினர்களாலும் பேச்சளவில் உறவு இருக்குமே தவிர செயலளவில் இருப்பது அரிது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். ஆரோக்கியத் தொல்லை அகல, மாற்று வைத்தியம் கைகொடுக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. பணிபுரியும் பெண்கள் மேலிடத்தை அனுசரித்துச் செல்வது நல்லது. அதனால் எதிர்பார்த்த நற்பலன்களை எளிதில் அடையலாம். கலைவாணி வழிபாடும், முருகப்பெருமான் வழிபாடும் கைகொடுக்கும் மாதம் இது.

(தொடரும்)

### சில் துணி விநியோகம்

# லலித் வீரதுங்க, அனுஷவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

சில் துணிகளை விநியோகம் செய்த சம்பவம் தொடர்பில் சிறைத் தண்டனை பெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட ஆகியோரின் மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் நவம்பர் 26ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அந்த மனு நீதிபதிகளான தீபாலி விஜேசுந்தர மற்றும் அசல வெங்கப்புலி ஆகியோர் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்ட போது இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

அன்றைய தினம் வழக்கு தொடர்பாக எழுத்துமூல அறிக்கையை சமர்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இரண்டு தரப்பினருக்கும் உத்தரவிட்டுள்ளது.

2015ஆம்ஆண்டுதொலைத் தொடர்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான 600 மில்லியன் ரூபாவை பயன்படுத்தி சில் துணிகளை விநியோகம் செய்த சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இருவருக்கும் கடுமையான உழைப்புடன் மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# அரசுக்குள் காணப்படும் கருத்து மோதல்கள் வெளிப்பட்டுள்ளன

## கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

இந்திய புலனாய்வு அமைப்பான றோ தன்னைக் கொலை செய்வதற்கு சதி செய்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாக வெளிவரும் செய்திகள் தொடர்பில், அரசாங்கத்துக்குள்ளேயே பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்திலிருந்து அரசாங்கத்துக்குள் காணப்படும் கருத்து முரண்பாடுகள் தெளிவாக வெளிப்பட்டுள்ளன என பொது எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் உரிய முறையில் ஆராய்ந்து உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கொலை சதித்திட்டம் தொடர்பாக த ஹிந்து பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி மற்றும் அது தொடர்பாக முன்வைக்கப்பட்டும் கருத்துக்கள் குறித்து பொது எதிரணியில் நிலைப்பாட்டை நேற்று முன்தினம் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (7)

# அதிர்ச்சி கொடுத்த பாரிய மலைப்பாம்பு

(கொழும்பு)

காட்டில் இருந்து கோழி கூட்டுக்குள் புகுந்து பாரிய மலைப்பாம்பு ஒன்று அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மீகஹக்கிவுல பிரதேசத்தில் உள்ள கோழி கூட்டுக்குள் புகுந்த பாரிய அளவிலான மலைப்பாம்பு ஒன்று 10 கோழிகளை விழுங்கியுள்ளது.

விழுங்கிய பின்னர் பாம்பு மீண்டும், காட்டிற்கு செல்ல முடியாமல் அங்கேயே தடுமாறியுள்ளது.

விழுங்கிய 10 கோழிகளில் 9 கோழிகளை சிறிது நேரத்தின் பின்னர் பாம்பு வாந்தி எடுத்துள்ளது.

அதன் பின்னர் அங்கிருந்தவர்கள் பாம்பை பிடித்து வனவிலங்கு திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர். (7)

# வெளிநாட்டில் அபூர்வமான வைரம்; சினிமாப் பாணியில் கொள்ளை

## இலங்கை இளைஞனுக்கு 5 வருட சிறைத் தண்டனை

மத்திய கிழக்கு நாடொன்றில் மிகவும் பெறுமதி வாய்ந்த வைரக்கல்லை திருடிய இலங்கையர்களுக்கு 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

டுபாயில் உள்ள நிறுவனம் ஒன்றில் அபூர்வமான வைரக்கல்லை திருடியவர்களுக்கே சிறைத்தண் டனை வழங்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 73 மில்லியன் டினார் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வைரக்கல்லை, டுபாய் பொலிஸார் இலங்கையிலிருந்து மீட்டுள்ளனர். மிகவும் அரியவகையிலான நீல வைரக்கல் ஒன்று இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கப்பல் ஊடாக பாதணி ஒன்றை அனுப்பிவைத்தனை போன்று வைரக்கல்லை அந்தக் பாதணி பெட்டியில் மறைத்து வைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்திற்கு தொடர்புடைய இரண்டு இலங்கையர்களுக்கும் நேற்றைய தினம், டுபாய் குற்றவியல் நீதிமன்றத்தினால் 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு 38 வயதான இலங்கையருக்கு 3 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், அவர் பாதுகாப்பு பிரிவினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளார். (7)

# அதுருகிரிய துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 'பண்டா' மரணம்

(கொழும்பு)

அதுருகிரிய ஒருவல பிரதேசத்தில் பொலிஸாருடன் ஏற்பட்ட பரஸ்பர துப்பாக்கி தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில்சிகிச்சை பெற்றுவந்த மாகந்துரே மகேஸ் மற்றும் அங்கொட லொக்கா ஆகிய பாதாள உலக தலைவர்களுக்கு நெருக்கமானவரான பண்டா எனப்படும் ரணசிங்க ஆராச்சிகே ஹசித உயிரிழந்தார்.

கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற குறித்த துப்பாக்கி தாக்குதலின் போது தலையில் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் நேற்று முன்தினம் மாலை திடீர் சுகவீனமடைய மீண்டும் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தநிலையில் பண்டா எனப்படும் ஹசித உயிரிழந்தார். (7)

# வலம்புரிச் சங்குடன் இருவர் கைது



(கொழும்பு)

இரண்டரை கோடி ரூபாய் பெறுமதியான டைட்டன் வகை வலம்புரி சங்கொன்றை விற்பனை செய்ய சென்ற இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று பிற்பகல் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லிஹிணியாடி பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர்கள் வலம்புரி சங்கினை விற்பனை செய்ய முற்பட்ட போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வலம்புரி சங்கு சுமார் 2 கிலோ கிராம் எடையை கொண்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களை சேர்ந்த சந்தேக நபர்கள் இருவரும் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் மாதம் முதலாம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (7)

# இஸ்ரேலில் பணியாற்றும் இலங்கையர்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்

## மனுஷ நாணயக்கார உறுதி



(கொழும்பு)

பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார இஸ்ரேலில் பணி புரியும் இலங்கையர்களை சந்தித்து அவர்கள் பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இஸ்ரேலுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தில் ஈடுபட்டுள்ள தொலைத்தொடர்பு டிஜிற்றல் அடிப்படை வசதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அங்கு பணியாற்றும் இலங்கையர்களையும் அவர்களுக்கு தொழில் வழங்குவோரையும் நேற்று முன்தினம் சந்தித்தார்.

அவர்கள் முன்வைத்த கோரிக்கை மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்று கொடுப்பதாக தெரிவித்தார். அங்கு விவசாய துறையில் பணியாற்றும் இலங்கை பணியாளர்களை நேரில் சென்று சந்தித்தார். இதன் போது அந்த நிர்வாகத்தினர் இலங்கையினரின் சேவை பணிகளை பாராட்டினார்.

சேவைகளை வழங்கும் தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ள இலங்கை பணியாளர்களையும் அவர்கள் பணியாற்றும் இடத்தில் அமைச்சர் சந்தித்தார்.

அவர்களது சேமநலன் தொடர்பிலும் பிரதி அமைச்சர் கேட்டறிந்தார். இலங்கை சேவையாளர்களை பணிக்கு அமர்த்தியுள்ள நிர்வாகத்தின் இலங்கை பணியாளர்களின் ஆற்றல்களை பாராட்டினார். அத்தோடு மேலும் பல இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கவுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (7)

# கலஹா விவகாரம்; மேலுமிருவர் கைது

கலஹா வைத்தியசாலையின் மீது தாக்குதல் நடத்தி, சேதங்களை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ், மேலும் இருவரை கைது செய்துள்ளதாக, கலஹா பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கலஹா வைத்தியசாலையில், பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்து, பொது சட்டத்தை மீறி, அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 பேரின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, கண்டி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போதே, அவர்களை, எதிர்வரும் 25 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (7)

# பாரதம்

# ஒடிசாவில் டிட்லி புயல் உயிரிழப்பு 65 ஆக உயர்வு





(புவனேஸ்வர்)

ஒடிசா மாநிலத்தில் கோரத் தாண்டவமாடிய டிட்லி புயலின் எதிரொலியாக பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக்கு பலியானோர் எண்ணிக்கை 65 ஆக உயர்ந்துள்ளது.

வங்கக் கடலில் உருவான டிட்லி புயல், ஒடிசாவின் கோபால் பூருக்கும் ஆந்திராவின் கலிங்கப்பட்டினத்துக்கும் இடையே கடந்த 11ஆம் திகதி கரையைக் கடந்தது. இதையடுத்து பலத்த காற்றுடன் ஒடிசா கடற்கரைகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

வீதிகளில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. பல்வேறு பகுதிகளில் வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவும் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் மற்றும் மாநில மீட்புக் குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 65 ஆக உயர்ந்துள்ளது. வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் சுமார் 2200 கோடி ரூபாய் என முதல் கட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (7)

## 700 பேரை கடத்தி சென்ற தீவிரவாதிகள்

# நாளுக்கு 10 பேரை கொலை செய்யப்போவதாக மிரட்டல்

(மொஸ்கோ)

அமெரிக்கர்கள் உள்ளிட்ட 700 பேரை கடத்தி சென்ற ஐ.எஸ்.தீவிரவாதிகள் நாள் ஒன்றுக்கு 10 பேரை கொலை செய்யப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர்.

ரஷ்யாவின் முக்கிய செய்தி ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், ஒக்டோபர் 13 ஆம் திகதி சிரியாவின் டேர் அல்-சோர் மாகாணத்தில் உள்ள அகதிகள் முகாமை தாக்கிய ஐ.எஸ். பயங்கரவாதிகள் சுமார் 700 பேரை பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் உள்ளிட்ட 700 பேர் ஐ.எஸ்.பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளதாகவும், நாளுக்கு 10 பேர் வீதம் அவர்கள் கொல்லப்பட இருப்பதாகவும் ரஷ்ய ஜனாதிபதி புடின் பகீர் தகவலை வெளியிட்டுள்ளார்.

சிரியாவில் உள்ள யூப்ரடீஸ் நதிக்கரையில் குறித்த கைதிகளை ஐ.எஸ்.பயங்கரவாதிகள் சிறை வைத்துள்ளதாகவும் புடின் வெளிப்படுத்தியுள்ளார்.



ரஷ்யாவின் சோச்சி பகுதியில் நடைபெற்ற தலைவர்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட ரஷ்ய ஜனாதிபதி புடின்,சிரியாவில் அமெரிக்கா மற்றும் அதன் ஆதரவு படைகள் கைப்பற்றியிருந்த பகுதிகளை தற்போது மீண்டும் ஐ.எஸ்.பயங்கரவாதிகள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

மேலும், ஐ.எஸ்.பயங்கரவாதிகள் இறுதி எச்சரிக்கைகளை அளித்துள்ளதாகவும், சில கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர் எனவும், ஒவ்வொரு நாளும் பத்து பேரை சுட்டுக்கொல்வதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது பயங்கரமானது, இது ஒரு பேரழிவு என குறிப்பிட்டுள்ள புடின், ஐ.எஸ். பயங்கரவாதிகளால் கைது செய்யப்பட்டவர்களில் சில ஐரோப்பியர்கள் மற்றும் அமெரிக்கர்களும் உள்ளனர் என்றார். இருப்பினும், பயங்கரவாதிகளின் கோரிக்கைகள் என்ன என்பது தொடர்பில் புடின் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

ஐ.எஸ்.பயங்கரவாதிகள் அகதிகள் முகாமை தாக்கிய தும்கைது செய்ததும் உண்மை தான் என்றாலும், 700 பேர் என்ற எண்ணிக்கையில் தமக்கு சந்தேகம் இருப்பதாக புடின் தெரிவித்துள்ளார்.

ஆனால் ரஷ்ய ஊடகமானது சுமார் 130 குடும்பங்களை பயங்கரவாதிகள் கடத்தியுள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளது. கடத்தப்பட்டவர்களில் பெண்களும் குழந்தைகளும் உள்ளதாக சிரியாவில் செயற்பட்டுவரும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் குழு உறுதி செய்துள்ளது. (7)

# சவுதி ஊடகவியலாளர் கொன கடும் விளைவுகளை



(வோஷிங்டன்)

சவுதி அரேபியாவில் மாயமான ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்டிருந்தால் அதற்கான விளைவுகளை அந்நாடு சந்திக்கும் என அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சவுதி மன்னர் சல்மானின் முடியாட்சியை பற்றி கடுமையாக விமர்சித்து வந்தவர், அந்த நாட்டின் ஊடக வியலாளர் ஜமால் கஷோக்கி (59). அண்மையில் இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபிய துணை தூதரகத்துக்கு கடந்த 2ஆம் திகதி சென்ற அவர், மாயமானார்.

அவர் அந்த தூதரகத்துக்குள் வைத்து சவுதி அரேபிய முகவர்களால் கொல்லப்

# உலகமயமாக்கல் கிரிமியா துப்

## ரஷ்ய ஜனாதிபதி பு

(மொஸ்கோ)

உலக மயமாக்கலின் விளைவே கிரிமிய கல்லூரி தாக்குதலென ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையங்களால் ஏற்படும் சமூக மாற்றங்கள் தொடர்பாக அன்றாடம் தெரியவருகின்றதென குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி புடின், குறிப்பாக அமெரிக்காவில் பாடசாலைகளிலேயே இவ்வாறான துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் ஆரம்பித்துவிடுகின்றன என சுட்டிக்காட்டினார்.

கிரிமியாவிலுள்ள கல்லூரி யொன்றில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், துப்பாக்கிதாரியான கல்லூரி மாணவன் உள்ளடங்கலாக 20 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 15 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றனர்.

18 வயதான குறித்த மாணவன், அக்கல்லூரியில் 4ஆம் வருடத்தில் கல்விபயின்று வந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், மாணவனின் மரண விசாரணையில் அவரது மனநிலை குறித்து ஆராயவுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

# மயிரிழையில் உ ஆப்கானுக்கான அ

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற தாக்குதலொன்றின் போது ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்க படையினரின் தளபதி ஜெனரல் ஸ்கொட் மில்லர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

கந்தகாரில் இடம்பெற்ற தாக்குதலில் ஆப்கானிஸ்தானின் முக்கிய படையதிகாரிகள் பலர் கொல்லபட்டுள்ளனர்.

கந்தகாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முக்கிய கூட்டத்தை முடித்துக்கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தவர்கள் மீது அப்பகுதி ஆளுநரின் மெய்ப் பாதுகாவலர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



இதன் போது ஆப்கானிஸ்தானின்

## காலை செய்யப்பட்டிருந்தால் ள சந்திக்க நேரிடும்

### ட்ரம்ப் எச்சரிக்கை

பட்டு விட்டார் என்று பல தரப்பிலும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை இதுவரை சவுதி அரேபியா மறுத்து வருகிறது. இது ஆதாரமற்றது, தவறானது என அந்த நாடு திட்ட வட்டமாக கூறுகிறது.

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி சவுதி அரேபியா வால் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த நாட்டின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்தார்.

அதைத் தொடர்ந்து ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி மாயம் ஆனது தொடர்பாக மன்னர் சல்மான் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். இதற்கிடையே சவுதி அரேபிய அதிகாரிகளின் அனுமதி பெற்று, துருக்கி பொலிஸ் அதிகாரிகள் இஸ்தான்புல் துணைத்தூதரகத்துக்கு சென்று விசாரணை நடத்தினார்கள்.

இதற்கிடையே, ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொலை செய்யப்படும் வீடியோ வெளியாகி உள்ளதாக துருக்கி அரசு நாளிதழ் தகவல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன் தினம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகை யில், ஊடகவியலாளர்ஜமால்கஷோக்கி கொல்லப்பட்டு விட்ட தாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அப்படி இருக்கும் பட்சத்தில் அது மிகவும் துயரமானது. சவுதி அரேபியா அதற்கான கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளார். (7)

## மாயமான ஊடகவியலாளரின் இறுதிக்கட்டுரை வெளியானது



(ரியாத்)

சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியால் எழுதப்பட்ட இறுதிக் கட்டுரை அவர் காணாமல்போய் இரண்டு வாரங்களின் பின்னர் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையால் வெளியிடப்பட்டுள்ளது. ஒக்டோபர் 2 ஆம் திகதி இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி தூதரகத்தினுள் நுழைந்த ஜமால் கஷோக்கி அதன் பின்னர் காணாமல் போயிருந்தார்.

அரேபிய உலகில் ஊடக சுதந்திரம் இல்லாதது குறித்து தெளிவாக விவரிக்கும் உணர்ச்சிகரமான இக்கட்டுரை தற்போது ஜமால் கஷோக்கியின் உதவியாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

ஜமால் கஷோக்கி திரும்பி விடுவார் எனும் நம்பிக்கையில் புதன்கிழமை இரவுவரை இந்தக்கட்டுரை வெளியீட்டை தாமதப்படுத்தியதாக வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் உலகளாவிய கருத்து ஆசிரியரான **Karen Attiah** தெரிவித்தார்.

தற்போது அது நடக்காது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும், தாம் திருத்தவேண்டிய ஜமால் கஷோக்கியின் கடைசிக்கட்டுரை இது என்பது மிகுந்த கவலையளிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தக்கட்டுரை அரேபிய உலகில் ஊடகச்சுதந்திரம் குறித்த ஜமால்கஷோக்கியின் உறுதிப்பாடு மற்றும் பேரார்வத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது எனவும் இந்த சுதந்திரத்துக்காக அவர் தனது உயிரையே தியாகம் செய்துள்ளார் எனவும் Karen Attiah தெரிவித்தார்.

அரேபிய உலகிற்கு அதிகளவில் தேவைப்படும் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் என தலைப்பிடப்பட்ட இக்கட்டுரையானது, அரேபிய உலகில் துனிசியா மாத்திரமே சுதந்திரமான நாடு என வகைப்படுத்தக்கூடிய ஒரே நாடு என்பதை சுட்டிக்காட்டுகிறது.

ஏனைய அரேபிய நாடுகளில் உள்ள மக்கள் அறியாமை காரணமாகவோ அல்லது தவறான புரிதல் காரணமாகவோ அவர்களது நாளாந்த வாழ்வை பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாமல் போராடுவதாக இக்கட்டுரையில் ஜமால் கஷோக்கி எழுதியுள்ளார்.

அத்தோடு பெரும்பாலான மக்கள் அரேபிய அரசாங்கங்களின் பொய்யான தகவல்களை முழுமையாக நம்பி ஏமாறுகிறார்கள் எனவும் துரதிர்ஷ்டவசமாக, இந்த நிலைமை மாற்றமுடியாதது எனவும் அவர் இக்கட்டுரையில் தெரிவித்துள்ளார். (7)

## கலின் விளைவே ப்பாக்கிச்சூடு

### புடின் சுட்டிக்காட்டு



அத்துடன், கல்லூரி அதிபர் மற்றும் உறவினர்களிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (7)

## ஊடகவியலாளர் கஷோக்கியின் உடல் எங்கே?

### காட்டுப் பகுதிக்குள் தேடுதல்

(இஸ்தான்புல்)

துருக்கியில் உள்ள சவுதி அரேபிய துணைத் தூதரகத்துக்கு சென்ற போது காணாமல் போன சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் உடலை அருகில் உள்ள காட்டுப்பகுதி மற்றும் விளை நிலத்தில் துருக்கி பொலிஸார் தேடி வருகின்றனர்.

கஷோக்கி, இஸ்தான்புல்லிலுள்ள துணைத் தூதரகத்துக்குள் கொலை செய்யப்பட்டதற்கான காணொளி மற்றும் ஒலிப்பதிவு ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாக துருக்கி தெரிவித்துள்ளது.

எனினும் அவருக்கு என்ன நேர்ந்தது என்பது தங்களுக்குத் தெரியாது என சவுதி அரசாங்கம் தொடர்ந்தும் கூறி வருகின்றது.

எனினும், ஊடகவியலாளர் கஷோக்கி கொல்லப்பட்டு அருகில் உள்ள காட்டுப் பகுதி அல்லது விவசாய நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று பெயர் குறிப்பிடாத துருக்கி அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சவுதி துணைத் தூதரகம் மற்றும் தூதுவரின் வாசஸ்தலத்திலிருந்து பெறப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு கஷோக்கியின் மரபணுக்களுடன் ஒப்பிட்டு பார்த்து சம்பவத்தின் பின்னணி தொடர்பாக ஆராயப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சவுதி ஊடகவியலாளரின் கொலை தொடர்பான ஆதாரமாக கருதப்படும் ஒலிப்பதிவொன்றை தாம் செவிமடுத்ததாக தெரிவிக்கப்படும் கருத்தை அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ கடுமையாக மறுத்துள்ளார்.

"நான் எந்தவொரு ஒலிப்பதிவையும் கேட்கவில்லை, நான் எந்தவித எழுதப்பட்ட ஆவணத்தையும் பார்க்கவில்லை" என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

## ல் உயிர் தப்பிய அமெரிக்க தளபதி



புலனாய்வுப் பிரிவின் தலைவரும் தலைமை பொலிஸ் அதிகாரியும் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க படைகளின் தளபதி ஸ்கொட் மில்லர் காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பியுள்ளார். எனினும் இரு அமெரிக்க பிரஜைகள் காயமடைந்துள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட நபரும் கொல்லப்பட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகின்றன.

தலிபான் அமைப்பினர் இந்த தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளனர். கொல்லப்பட்ட புலனாய்வு தலைவரும் பொலிஸ் தலைவரும் நீண்ட நாட்களாக எங்கள் இலக்காகயிருந்தனர் என குறிப்பிட்டுள்ள தலிபான்அமைப்புபொலிஸ் அதிகாரி ஈவிரக்க மற்றவர் எனத் தெரிவித்துள்ளது. (7)

## போர் அழிவுகளை விட ஆப்கானை கடுமையாக வாட்டும் வரட்சி

(காபூல்)

அழகிய இயற்கை வனப்பையும், செழுமையையும் கொண்டிருந்த ஆப்கானிஸ்தான் இன்று வரண்ட கரடு முரடான தளத்தை உரிமையாக்கிக் கொண்டிருக்கின்றது.

மோசமான வரட்சி ஆப்கானிஸ்தானில் பலரின் வாழ்க்கையை, அவர்களின் எதிர்காலத்தை மிக மோசமாக சிதைத்திருக்கிறது. குறிப்பாக பலரை இடம்பெயரச் செய்துள்ளது. இடம்பெயர்ந்த மக்களிடையே பெரும் மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

அரச தரப்பினருக்கும், தலிபான்களுக்கும் இடையேயான யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்தவர்களை விட வரட்சியின் காரணமாக தங்களின் வசிப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு சென்றவர்களே அதிகமாக உள்ளனர். கடந்த பல ஆண்டுகாலம் நிலவும் கடுமையான யுத்தத்தை வரட்சி வென்றிருக்கின்றது.



வடக்கு மற்றும் மேற்கு ஆப்கானிஸ்தானில் வரட்சியின் காரணமாக ஏறத்தாழ 260,000 பேர் தங்கள் வசிப்பிடங்களிலிருந்து வெளியேறி வேறிடங்களுக்கு குடிபெயர்ந்துள்ளனர்.

சர்வதேச படைகள் போர் நடவடிக்கையை நிறுத்திய பின்னர், 2014 ஆம் ஆண்டுக்குப் பின் ஆப்கானிஸ்தானில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் துயரத்தில் உள்ள மக்களின் வாழ்வில் இந்த வரட்சியும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

2001 ஆம் அண்டு அமெரிக்கா தலைமையிலான படைகள் ஆப்கானில் ஊடுருவி, தலிபன்கள் வசமிருந்த பல பகுதிகளை கைப்பற்றியது. இந்த 17 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மீண்டும் தலிபான்களால் பல பகுதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையில் ஏற்பட்ட போரால் இடம்பெயர்ந்தவர்களை விட வரட்சியின் காரணமாக பலர் இடம்பெயர்ந்திருக்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வரட்சியால் பாதிக்கப்பட்ட 2.2 மில்லியன் மக்களுக்கு உதவ 34.6 மில்லியன் டொலர் நிதியை ஐக்கிய நாடுகள் சபை ஒதுக்கியுள்ளது. தற்சமயம் உணவை கொள்வனவு செய்வதற்காக ஐ.நாவின் சர்வதேச உணவுத் திட்டம் நிதி வழங்கி வருகின்றது. இதில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்வதற்காக துயரத்துடன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றார்கள். (7)

# ஜனாதிபதியைக் கொல்லச் சதித் திட்டத்தில் இந்திய உளவுத்துறைக்கு தொடர்பில்லை

## இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மறுப்பு



(கொழும்பு)

தம்மைப் படுகொலை செய்யும் சதித் திட்டத்தில் இந்திய உளவுத்துறை அமைப்புக்குத் தொடர்பு இருப்பதாக. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டுள்ளதாக, இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துள்ள அவர், "மூன்று அறிக்கைகளின் மூலம் இது நிராகரிக்கப்பட்டுள்ளது. ஊடகச் செய்திகள் பொய்யானவை.

இலங்கையில் எல்லா அரசியல் கருத்துக்களும், இந்தியாவுடனான நெருக்கமான உறவுகளுக்கு அழைப்பு விடுக்கின்றன" என்று தெரிவித்துள்ளார். (7)

# ஜனாதிபதியைக் கொலை செய்யும் அவசியம் இந்திய புலனாய்வு அமைப்பிற்கு கிடையாது

## வாசுதேவ கூறுகிறார்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்யும் அவசியம் இந்திய புலனாய்வு அமைப்பிற்கு கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்யும் அவசியம் இந்திய புலனாய்வு அமைப்பிற்கு கிடையாது. கொலை சதித் திட்டம் தொடர்பிலான விசாரணைகளை திசைதிருப்பவே இவ்வாறான வதந்திகள் பரப்பப்படுகின்றன.

அத்துடன் கொலை சதியின் சூத்திரதாரி யார் என்பதை கண்டறிய வேண்டுமாயின் நாலக சில்வாவை உடனடியாக கைது செய்து தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவினை சீர்குலைப்பதாகவே குறித்த குற்றச்சாட்டு அமைந்துள்ளது" என அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (7)

# இலங்கை விமானப் படைக்கு ஆறு புதிய சீன விமானங்கள்

(கொழும்பு)

சீனாவில் தயாரிக்கப்பட்டு, இலங்கையில் பாகங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட ஆறு புத்தம் புதிய பி.ரி-6 பயிற்சி விமானங்கள் இலங்கை விமானப்படையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜெயம்பதி, இந்த விமானங்களை நேற்று முன்தினம் பொறுப்பேற்றார்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த விமானங்களின் பாகங்கள் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் உள்ள விமான பொறியியல் பிரிவில் ஒருங்கிணைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த விமானங்கள் இலங்கை விமானப்படையின் 1 ஆவது பயிற்சி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, சீனக்குடா விமானப் படைத் தளத்தில் நிறுத்தப்படும்.

புதிதாக பயிற்சி பெறும் விமானிகளுக்கு இந்த விமானத்தில் பயிற்சி அளிக்கப்படும். (7)

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தினால் ஊழல் மோசடி குற்றச் செயல்கள் இடம்பெற மாட்டாது

## பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் தெரிவிப்பு

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமை சட்டத்தை நாட்டு மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதனை முறையாகப் பயன்படுத்தினால் நாட்டில் இலஞ்சம், ஊழல் மோசடி போன்ற குற்றச் செயல்கள் எதுவும் இடம்பெற வாய்ப்பில்லை என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

மேலும்ஜனநாயக நாடொன்றில் தகவல் அறியும் உரிமையென்பது பிரதான விடயமாகும். அரசில் என்ன இடம்பெறுகின்றதென்பதையும் அதன் வேலைத்திட்டங்கள் குறித்தும் நாட்டு மக்கள் அறிந்து கொள்வது அதி முக்கியமாகும். இதுவும் நல்லாட்சிக்கும் ஜனநாயக ஆட்சிக்கும் உரிய பிரதான வகிபாகமாகும் என்றும் தெரிவித்தார்.

யு.எஸ்.எயிட் அமைப்பு மற்றும் இலங்கை பத்திரிகைப் பேரவையினர் ஆகியோரின் அனுசரணையுடனும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமாரின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தகவல் அறியும் உரிமை சட்டமூலம் தொடர்பான செயலமர்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (7)

# பயங்கரவாதக் குற்றச்சாட்டிலிருந்து இலங்கை மாணவன் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவில் கைதுசெய்யப்பட்ட இலங்கை மாணவன் மொஹமட் நிஷாம்தீன் அக்குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் இதற்கு முன்னர் அவுஸ்திரேலிய நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது பயங்கரவாத குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சிட்னி பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 25 வயதான மொஹமட் நிஷாம்தீன், ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் சார்பாக சிட்னி நகரை குண்டு வைத்துத் தகர்த்தல் மற்றும் அவுஸ்திரேலியாவின் முன்னணி அரசியல்வாதிகளைபடுகொலை செய்தல் ஆகிய குற்றச் செயல்களுக்காக கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

இருப்பினும் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானதென நிரூபிக்கப்பட்டமையினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# இன்று ஒரு தகவல்

## விட்டுக்கொடுப்பானேன்

பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகளை, சினிமாக்காரர்களை, எழுத்தாளர்களை, மற்றவர்களை நாம் விமர்சனம் செய்ய நேரிடும் போது தயவு தாட்சண்யமின்றி விமர்சனம் செய்யலாம்.

ஆனால் நம் உறவினர்கள் , நண்பர்கள் நாம் பணிபுரியும் அல்லது நம்மிடம் பணிபுரியும் நபர்களையும் மற்ற நெருங்கிய வட்டத்தினரையும் விமர்சனம் செய்யும் போது கொஞ்சம் முன்னெச்சரிக்கை வேண்டும்.

விமர்சனம் செய்பவர்கள் இரு பிரிவினர். முதற்பிரிவினர் கேட்டால் மட்டும் விமர்சனம் செய்வார்கள்.

உங்கள் மேலதிகாரி எப்படி?

அந்த ஆள் மாதிரி மோசமான ஆளை நான் உலகத்தில் பார்த்ததில்லை.

உங்கள் கணவர் எப்படி?

அதையேன் கேக்கிறீங்க? எல்லாம் நான் போன ஜென்மத்திலே செஞ்ச பாவம் என்றெல்லாம் விமர்சனம் செய்வார்கள்.

அதுவும் யாரிடத்தில்?

போன நிமிடம் அறிமுகமானவர்களிடத்தில்!

இரண்டாவது பிரிவினர்கள், இருக்கிறார்களே, இவர்களிடம் யாரும் எதுவும் கேட்கவே வேண்டாம். இவர்களாகவே லொடலொடவென்று தம்மைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றி அநாவசியமாய் விமர்சிப்பார்கள்; அருவருக்கும்படி விமர்சிப்பார்கள்.

முன் பின் தெரியாதவர்களிடத்தில் மட்டுமல்ல, மிக நெருங்கியவர்களிடமே கூட நம்மைச் சுற்றியுள்ளவர்களை நாம் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்?

வாயும் காதும் சிலருக்கு விஷங்கள். ஒன்றைப் பத்தாக்கும் குணம் இவற்றிற்கு உண்டு.

எனவே, நாம் சொல்பவை சம்பந்தப்பட்டவர்களைச் சென்று அடையும் போது , நமக்கும் அவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நிலைமை மோசமாகிறது.

மன நிம்மதியைக் குலைக்க இதைவிட வேறு ஓர் அம்சம் தேவையில்லை.

வாயைக் கிளறி வம்புக்கு ஆளாக்குபவர்களிடமும் சரி, நாமாகப் பேசும் போதும் சரி, வடிகட்டியே பேச வேண்டும்.

கடுமையாக ஒருவரை விமர்சிக்கும் போது நாம் மற்றவர்களிடம் வலிய குறை காண்கிறோம் அல்லது இருக்கிற குறையை மிகைப்படுத்துகிறோம்.

இந்த நிலையில் விடயம் தெரிந்தவர்கள் அல்லது பண்பாளர்கள், நம்மைப் பற்றித் தான் முதலில் தவறாக எண்ண ஆரம்பிக்கிறார்கள். எதிலும் நிறைவு காணும் மனமோ, குறைகள் என்பது மனித இயல்பு என்று எண்ணும் பக்குவமோ இவர்களுக்கு இல்லையே-சே! மட்டமான ஆள் இவர் ! என்று முடிவுக்கு வருகிறார்கள்.

கண்டபடியெல்லாம் மற்றவர்களை விமர்சனம் செய்யும் இவர், நாளைக்கு நம்மைப் பற்றியும் இப்படி விமர்சனம் செய்யமாட்டார் என்பது என்ன நிச்சயம் என்று சிந்திக்கத் தொடங்குகிறார்கள்.

நம்மைச் சுற்றியவர்களை விமர்சனம் செய்யும் போது முடிந்தால் பாராட்டுவோம். பாராட்டும் படி இல்லாவிட்டால் சிரித்து மழுப்பிட வேண்டியது தான்.

வாயை வைத்துப் பிழைக்கும் சாமர்த் தியக் கலை நமக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை.வாயை வைத்து வாழ்வைக் கெடுத்துக் கொள்ளும் வேலை ஒரு போதும் நமக்கு வேண்டாம்.

**லேனா தமிழ்வாணன்**

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–165

## எலிகளினால் தொடரும் தொல்லை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஐந்தறிவு படைத்த விலங்குக்குத் தெரிந்தது, ஆறறிவு படைத்த மனிதனுக்குத் தெரியவில்லை. விலங்கிலிருந்த நோய்க்காரணி அங்கிருந்து தாவி மனிதனுக்கு வந்து விட்டது. விலங்கில் இருப்பதைவிட மனிதனில் இருப்பதும் பல்கிப் பெருகுவதும் இலகுவானது போல இங்கே விசித்திரம் என்னவென்றால் விலங்கில் இருக்கும்போது அந்த விலங்குக்கு அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தாத நோய்க்கிருமி மனிதனை அடைந்தவுடன் விஸ்வரூபமெடுப்பது தான். விலங்கினைக் காவியாகப் பயன்படுத்தி இலகுவாக மனிதனில் தொற்றி மரணத்தைக் கொடுக்கக் கூடிய ஆற்றல் படைத்த இவ்வளவு வீராப்புடைய நுண்ணங் கியைக் கட்டுப்படுத்துவது சுலபமான காரியமல்ல. விலங்குகளில் விளைந்தாலும் அவற்றில் இவற்றினது தாக் கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றது. ஆனால் மனிதனால் உடனடியாக எதிர்ப்புச் சக்தியை உருவாக்க முடியாமல் போவது நோய் தீவிரமடைவதற்கான காரணமாகும். மாறாக மனிதானல் இயலவில்லை எனலாம். இயற்கையின் படைப்பு இப்படியாகிவிட்டது. எலிகளும் மனிதனும் விரோதிகளான நிலை. எலிகளால் மனிதனுக்குப் பல வழிகளில் சேதங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

01. விளை நிலத்தில் குறிப்பாக வரப்பிலே வளை வைத்துத் தன் குடி பெருக்கி அனைத்தும் குடும்பமாக அங்கே விளைந்திருக்கும் பயிர்களை வாயால் வெட்டியும் தேவையானதை உண்டு சேதத்தை ஏற்படுத்துகின்றன. அண்மைக்காலமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகள், விளைநிலங்களில் மட்டுப்படுத்தப்பட்ட செய்கைகள், கூலிப் பிரச்சினைகள் போன்றவை காரணமாக விளைநிலங்களிலுள்ள அநேகமான வரப்புக்கள் செப்பனிடப்படாது உள்ளன. வயற்பரப்பினைப் பயிர்ச் செய்கைக்காகத் தயார்படுத்தும் போது வரம்புகளும் அவசியம் செப்பனிடப்படல் (Trimming) வேணடும். தவறினால் எலிகள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது போவதுடன் விளைநிலத்தில் பயிர் செய்யப்பட்ட பயிர்களில் ஏற்படுத்தப்படும் சேதத்தைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடும்.


02. வீடுகளில் வீட்டெலி, சுண்டெலி என்பவற்றின் எண்ணிக்கை பெருகி உணவுப் பொருள்களில் அதிக சேதத்தை ஏற்படுத்திவிடுகின்றன. உணவுப் பொருள்களை கையாளுவதிலும் சேமிப்பதிலும் காட்டும் அசிரத்தை இவற்றினது பெருக்கத்திற்கு இலகுவாக வழிசமைத்துவிடும்.

03. உணவுப் பொருள்களைப் பெருமளவில் சேமித்து வைக்கும் உணவுக்களஞ்சியங்களின் கட்டுமானங்களும் பராமரிப்பும் முறையாக இல்லாமையினாலும் எலிகள் பெருக்கமடைகின்றன.

04. இவற்றைவிடத் தற்செயலாக எலிகளால் கடியுண்டுபோக நேரும் சந்தர்ப்பங்கள் உண்டு. இதைத்தவிர எலிகளின் அட்டகாசத்தினால் உணவுப் பதார்த்தங்களுடன் கலக்கப்படும் அவற்றின் சிறுநீர், எச்சம் என்பவற்றினூடாகக் காய்ச்சலைத் தோற்றுவிக்கும் நுண்ணங்கியும் பரவிவிடும். எலிக்காய்ச்சலுக்கு அடிப்படைக் காரணமாக இதனை நோக்கலாம். குறிப்பாக விற்பனை நிலையங்களில் கவனக் குறைவு அல்லது அசிரத்தையின் காரணமாக எலியின் எச்சங்கள் தானியங்கள் மற்றும் ஏனைய உணவுப் பொருள்களுடன் கலக்கும் வாய்ப்பு அதிகம். போதாக் குறைக்கு நிறுக்கும் போது தானியம் மற்றும் உணவுப் பொருள்களுடன் எலிகளின் எச்சங்களையும் சேர்த்து நிறுக்கும் விற்பன்னத்துவத்தையும் என்னவென்பது? எலிகளின் எச்சம் தற்செயலாகவேனும் விற்பனைப் பொருள்களில் கலந்தால் அல்லது விழுந்தால் அவற்றை விற்பனைக்கு உதவாத பொருள்களாக ஒதுக்கி விடுவது மனச்சாட்சியுள்ள வர்த்தகப் பெருமக்களுக்கு அழகு - மாறாக இலாபம் ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டவர்கள் எலியின் கழிவுகளையும் சேர்த்து நிறுத்துக் கொடுப்பதுடன் அவற்றுடன் நோய்க் கிருமிகளையும் சேர்த்துக் கொடுக் கிறார்கள். அநேகமாகத் தெரிந்தும் சிலவேளைகளில் தெரியாமலும் இவ்வாறு எலியின் கழிவுகளுடன் நோய்க் காரணிகளையும் சேர்த்துக் கொடுக்கும் இச் செயலை - இழிசெயலை என்ன வென்பது? இது வர்த்தப் பெருமக்களுக்குச் சமர்ப்பணம், தொழிலில் சுத்தம் பேணும் உங்களின் திறமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் உணவுச் சுகாதாரத்திலும் அவசியம் கவனஞ் செலுத்தப்படவேண்டும். குறிப்பாக உணவகங்கள் இது விடயத்தில் அவசியம் கவனம் செலுத்துதல் வேண்டும். இவ்வா றான தவறுகளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கூடக் கண்டுபிடிக்க முடியாது என்பதனைக் கவனிக்குக. அவர்களாகப் பார்த்துத் திருந்துவதைத் தவிர இதற்கு வேறு மார்க்கமில்லை.

05. எலிகளின் எச்சங்கள், சிறுநீர் போன்றவை தூசு துணிக்கையில் பட்டுக் காய்ந்து போயிருக்கும் நிலையில் அந்த இடத்தைத் துப்புரவு செய்யும் போது மேலெழுகின்ற தூசி மூலமாக நோயை உருவாக்கும் வாய்ப்பு மிக மிக அதிகமாகும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 179



### எலிகளால் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள்

உலகளாவிய ரீதியில் எலிகளால் 35 வகையான நோய்கள் மனிதனுக்கு ஏற்படுகின்றன என அறியப்பட்டுள்ளது. இவை எலிகள் மனிதனுக்கு கடிப்பதனாலும் எலிகளின் எச்சம், சிறுநீர் என்பவை உணவில் கலக்கப்படும் போதும், குடிதண்ணீரில் கலப்பதனாலும், இக்கழிவுகள் தூசிப்படலத்துடன் காய்ந்து நிலத்தைத் துப்புரவு செய்யும் போது மேலெழும்பி நோய் ஏற்படுத்தும் கிருமிகள் எம்மால் சுவாசிக்கப்படும் (Aerosolization)போதும் ஏற்படுத்தப்படுகின்றன. இவை தவிர நேரடியாக அல்லது ஒட்டுண்ணிகளாக வளரும் (Fleas), உண்ணி (Ticks) மற்றும் சிற்றுண்ணிகள் (Mites) மூலமாகவும் மனிதனுக்கு நோய்த் தொற்று ஏற்படுகின்றது. சற்று அவதா னமாக உற்றுநோக்கினால் எலிகள் தமது பங்குக்குச்சில நோய்களை மனித னுக்கு ஏற்படுத்துவதற்கான காவிக ளாக இருப்பதையும் அதில் ஒட்டுண்ணி யாக வாழும் மேலே குறிப்பிட்ட பேன்கள், உண்ணிகள், சிற்றுண்ணிகள் போன்றவை காவிகளாகவும் அவ்வாறே தொற்றுதலுக்கான அடிப்படைக் காரணங்களாகவும் இருப்பதனைக் காணலாம்.

எலிகளுக்கும் எமக்கும் எவ்வளவு நெருக்கம் பாருங்கள். நாம் விரும்பியோ விரும்பாமலோ எமது வீடில்வாழும், வந்து போகும் அவ்வப்போது தலையிடி கொடுக்கும் அழையாத விருந்தாளிகள் இவை. அழைப்புக்கொடுத்தே தலை யிடி கொடுப்பன இருக்கும்போது, அழையாத விருந்தாளி ஆகினால் எப்படியிருக்கும் என ஊகித்துப்பாருங்கள். எலிகளால் மனிதனுக்கு ஏற்படுத்தப்படும் நோய்க்ளில் எமது பிரதேசத்துடன் தொடர்பு பட்ட முக்கியமான நோய்களே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன.

லெப்ரோஸ் பைரோசிசு Leptosepirosis உலகளாவிய ரீதியில் இனங் காணப்பட்டுள்ள இந்த எலிக் காய்ச்சல் நோய் எலிகளினால் நேரடியாக மனிதனுக்குக் காவப்படுகின்றது. இந்த நோய்க்கான நுண்ணங்கி ஒரு வகை பக்றீரியா ஆகும் நாம் உண்ணுகின்ற உணவிலோ அல்லது குடிப்பதற்காகப் பயன்படுத்தும் நீரிலோ மரக்கறிகளிலோ எலிகளின் சீறுநீர்க் கழிவு கலக்கும்போது அதனூடாக இந்நோய் இலகுவில் மனிதனில் இந்நோய் தொற்றிக் கொள்கிறது. மூடி வைக்காத உணவு பரிமாறும் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களில் எலிகளின் சீறுநீர்க் கழிவு கலக்கும் சாத்தியம் அதிகமே. இதனை விட எலிகளின் தோல் மற்றும் மென்சவ்வு தோல் போன்றவை உணவுடன் கலப்பதனாலும் இப்பக்றீரியா எலிகளிலிருந்து மனிதனுக்குத் தொற்றிக் கொள்ளும். இந்த பக்றீரியாவை லெப்ரோஸ்பைரா, க்ரெறோ ஹெமரேஜியே (Leptospiralcterohaemorhagiae) என அழைப்பர். 4 தொடக்கம் 19 நாள்கள் வரை இந்நோய் விருத்தியாகும் காலமாக இருப்பதாக அறியப்பட்டுள்ளது. இந்நோய் மனிதரைத் தொற்றிக் கொண்டால் காய்ச்சல், தலையிடி, உடல் குளிரல், வாந்தியெடுத்தல் போன்ற வழமையான அறிகுறிகளுடன் சொறிவு போன்ற அறிகுறிகளும் இருக்கும். இது பற்றி மேலதிக தகவல்களுக்கு வைத்தியரின் உதவியை நாடுவது சிறந்தது. வழமையாக வரும் காய்சல், தலையிடி என அசட்டையாக இருக்காது வைத்தியர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்று இந்நோயைச் சரியாக இனங் கண்டு அதற்குரிய மருந்தை இங்கே குறிப்பிட்ட பக்றீரியாவைக் கட்டுப்படுதும் மருந்தை (anti biotics) அவசியம் உட்கொள்ள வேண்டும். எமக்கும் தெரியும் என ஏதோவொரு பக்றீரியா எதிர்ப்புக் குளிகையை மருத்துவரின் சிபார்சின்றி உள்ளெடுக்காதீர். அதனால் விளைவு விபரீதமாகிவிடும். எலிகளால் பிளேக் நோய்க்கு ஆளாகும் மனிதன் அவதானம் பேணாது மற்றை யோருக்கும் அதனைப் பரப்பும் அவலம்.

விலங்குகளில் இருந்து மனிதனுக்கு தொற்றும் நோய்கள் மற்றும் விலங்குகளால் மனிதனுக்கு ஏற்படுத்தப்படும் சேதங்கள் என்ற விடயம் தொடர்பாக கடந்த வாரம் எலிகளினால் விவசாய முயற்சிகளுக்கும் மனிதனது தேகாரோக்கியத்துக்கும் ஏற்படுத்தப்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்தோம். அந்த வகையில் எலிகளால் மனிதருக்கு ஏற்படுத்தப்படும் மேலும் சில பாதிப்புக்கள் குறித்து இவ்வாரம் ஆராய்வோம்.

### வீட்டு எலிகளால் பரவும் வைரசு நோய்

வீட்டு எலிகளால் (மஸ் மஸ்குலஸ்) காவப்படும் வைரசு நோயான 'லிம்போசைட்டிக் கோறியோ மெனின்ஜிற்றுசு'(LCM) ஆனது, உலகளாவிய ரீதியில் இனம்காணப்பட்ட காய்ச்சல் நோயாகும். இது ஒரு வைரசு நோயாக இருப்பதனால் புழு காய்ச்சல் போன்றதொரு அறிகுறி இங்கும் காணப்படும். சில வேளைகளில் மூளை மற்றும் மூளையுடன் இருக்கும் மென்சவ்வுப் பகுதியில் வீக்கம் காணப்படும். நோய் விருத்தியடைய எடுக்கும் காலம் 8 - 21 நாள்களாகும். வீட்டு எலிகளின் சிறுநீரும், எச்சங்களும் அவற்றினது உமிழ் நீர் சுரப்பு வீட்டிலுள்ள தூசியுடன் கலந்திருக்கும் நிலையில் வீட்டினைச் சுத்தப்படுத்தும் போது தூசிப்படலத்துடன் வைரசுவும் சேர்ந்தெழும்பி நாம் சுவாசிக்கும் காற்றுடன் இலகுவாக எமது சுவாசத் தொகுதியினுள் சென்றுவிடும்.

வீட்டிலே காணப்படும் எலிகளை - சுண்டெலிகளைக் கட்டுப்படுத்தாது விட்டால் இவ்வைரசு நோய்தொற்று ஏற்படுவதை நாம் தடுக்கமுடியாது. கவனியாது விடப்படும் பெட்டிகளினுள் மற்றும் துணிப்பொதிக்குள் இந்த எலிகள் குடித்தனம் நடத்தி எமது குடியைத் திக்குமுக்காடச் செய்கின்றன. இதனால் வீட்டில் இனவிருத்தி செய்வதைத் தடுக்க வேண்டும். எமக்கு தேவையற்றவை அல்லது எப்போதாவது பயன்படும் என நாம் கருதும் பொருள்களை அறையில் மூலையில் ஒதுக்கி அடுக்கி வைத்துவிடும் சந்தர்ப்பங்களில் அவ்விடங்களில் இவ் எலிகள் இலகுவாகக் குடித்தனம் நடத்தத் தொடங்கி விடுகின்றன. இவ்வாறு அடுக்கி வைப்பவற்றை அடிக்கடி கூர்ந்து அவதானிப்பதன் மூலம் அல்லது சுத்தப்படுத்துவதன் மூலம் எலிகளின் இத்தகைய வாழ்விடங்களை அழித்துவிடலாம்.

பிளேக் (Plague)நோய் இது 'யேர்சீனியா பெஸ்ரிசு' எனப்படும் ஒரு வகை பக்ரீறியாவினால் ஏற்படுத்தப்படும் நோய் ஆகும். காட்டு எலிகள், மர அணில்கள், அணில்கள் போன்றன இந்நோயைக் காவுகின்றன. இவ் விலங்குகளில் ஒட்டுண்ணி வாழ்க்கை நடத்தும் பக்றீரியா தொற்று ஏற்பட்ட பேன்கள் (fleas) கடிப்பதாலும் இந்நோய் நமக்கு தொற்ற வாய்ப்புண்டு. குறிப்பாக வனப்பகுதியில் விறகு மற்றும் வேறு தேவைகளுக்காக உட்செல்பவர்களுக்கு மேற்கூறிய விலங்குகள் கடிப்பதனால் பக்றீரியாவின் தொற்று ஏற்பட்டு பின்பு அதுவே வினையாகி விடுகின்றது. தவறுதலாக இவ்விலங்குகளால் கடியுண்டாலும், நோய் தொற்றுக்குள்ளாகிய விலங்கு கடிப்பதனாலும் இந்நோய் ஏற்பட வழியுண்டு.

ஆரம்பத்தில் காய்ச்சலுடன் கூடிய அறிகுறிகளைக் காட்டினாலும் இறுதியில் நியூமோனியா நிலையை இது அடையும். இவ் விறுதி நிலையில் நோய் வாய்ப்பட்டவர் இருமும் போது வெளி வரும் எச்சில் துணிக்கைகளின் ஊடாக இந்நோய் இலகுவாக ஏனையவர்களுக்கும் தொற்றிக் கொள்ளும். எப்போதும் இருமும் போது கைக்குட்டையைப் பயன்படுத்தி வாய்ப்பகுதியை மூடிக்கொள்ளும் பழக்கம் எம்மவர்களிடையே மிக மிகக் குறைவு. தும்மும் போதும் இருமும் போதும் இந்தவிடயத்தைக் கவனிப்பதே இல்லை. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது போல நோயைத் தம்மை அறியாமலே காவிச் செல்லும் இந்நோயாளிகளுக்கு விழிப்புணர்வை மேலும் மேலும் ஏற்படுத்துவதன் மூலமே ஒரு வழிக்கு கொண்டுவரமுடியும். நோயைக் காவுவதில் எலியின் பங்கு எந்தளவிற்கு முக்கியமானதோ அதை விட நோய் வாய்ப்பட்டவரினால் காவப்படும்நோயின் பரவும் விகிதம் அதிகமான தாகும். நோயுற்றவரை இனங்கண்டு தனிமைப்படுத்தி அவருக்கு சிகிச்சை அளிப்பது மிக மிக அவசி யமாகும்.

எலி கடிப்பதால் காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. இவ் வகை காய்ச்சலுக்கும் 'ஸ்ரெப்ரோபசில்லறி' காய்ச்சல் எனப் பெயர் உண்டு. இக் காய்ச்சலை "ஸ்ரெப் ரோபசில்லசு மொனிலிபோமிசு எனப் படும் பக்றீரியா ஏற்படுத்துகின்றது. இதில் இன்னொரு வகையான "ஸ்பில்லரி" காய்ச்சலை "ஸ்பைரில்லம் மைனர்" என்னும் இன்னொரு வகை ஏற்படுத்துகின்றது. ஏறத்தாழ 1 முதல் 3 கிழமைகள் நோய் விருத்தியாகும் காலமாக இருப்பது கவனிக்க வேண்டியதாகும்.

விட்டு விட்டுக் காய்ச்சல் காய்தல், உடல் குளிரும் தன்மை, தலையிடி மற்றும் தசைப்பிடிப்பு என்பன ஆரம்ப அறிகுறிகளாக இருப்பினும் பிந்திய அறிகுறிகளான சொறிதல் மற்றும் மூட்டுக்கள் சிவப்பாகி வீக்கமடைந்து நோவுடையதாக மாறிவிடுதல் இதன் அறிகுறிகளாகும்.

நோய் பற்றிய கவனம் இல்லாத அலட்சியப் போக்கு உயிரைக் காவு கொள்ளும் அவல நிலைக்குக் கொண்டு சென்று விடும். இது பற்றிய தெளிவு மக்களுக்கு அவசியம் தேவை. பேன், உண்ணி போன்றவற்றினூடாக நோய்க் கிருமிகள் பரவுகின்றன.

### "சல்மோனெல்லோசிசு"

எலிகள் மற்றும் சுண்டெலிகளினால் அவற்றின் எச்சங்கள் குடிக்கும் நீரில் மற்றும் உண்ணும் உணவில் கலப்பது "சல்மோனெல்லோசிசு" நோயை உண்டு பண்ணும். இதனை சல்மோனெல்லா வகைப் பக்றீரியாக்களே ஏற்படுத்துகின்றன. நோய் விருத்தியடையும் காலம் 6 முதல் 72 மணித்தியாலங்கள் ஆகும். திடீரெனத் தோன்றும் தலையிடி, வயிற்று நோ, வயிற்றுப் போக்கு சிலவேளைகளில் சத்தியெடுத்தல் என்பன இந்நோயின் அறிகுறிகளாகும். குறிப்பாக குழந்தைப் பிள்ளைகளில் இந்நோய் அதிகமாகக் காணப்படும். இது வரையிலும் எலியினால் நேரடியாகக் காவப்படும் நோய்களைப் பற்றிப் பார்த்தோம். ஆனால் எலியினால் மறைமுகமாகத் தோற்றுவிக்கப்படும் நோய்களுமுண்டு. இந்நோய்கள் எலிகளில் ஒட்டுண்ணி வாழ்க்கை வாழும் உண்ணிகளால் (Ticks)காவப்படுகின்றன எனக் கண்டறிந்துள்ளனர். இவற்றில் குறிப்பாக 1. பேபிசியோசிசு (Ba besiosis) சுண்டெலிகளிலுள்ள ஒட்டுண்ணிகளால் ஏற்படுத்தப்படுகின்ற நோயாகும். 2. கொல ரடோ உண்ணிக் காய்ச்சல் எலிகளிலிருந்து வரும் நுண்ணிகளால் காவப்படும் வைரசுவினால் ஏற்படுத்தப்படுகின்றன. லைம் (Lime) நோயானது உண்ணிகளால் காவப்படும் பக்றீரியாவினால் ஏற்படுத்தப்படுகின்றன.இந்நோய்களை விரைந்து கட்டுப்படுத்துவதில் முக்கியமான செயற்பாடாக எலிகளை கட்டுப்படுத்துவது அமைகிறது. நோய் ஏற்பட்ட பின்பு அங்குமிங்குமாக அலைவதை விடுத்து 'வரும்முன் காத்தல்' செயலில் தீவிரமாக அனைவரும் ஒன்றிணைவது அவசியம்.

# நாட்டின் நீதித்துறையில் எனக்கு ஒருபோதும் ஐயம் இருந்ததில்லை

## -கூறுகிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த-



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விடுதலையானமை மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ, நாட்டின் நீதித்துறை பற்றிய ஐயம் தனக்கு எப்போதும் இருந்ததில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

விஜேராம மாவத்தையில் உள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் நீதித்துறை எப்போதுமே அதன் சுதந்திரத்தைப் பேணி வந்துள்ளது. ஆனால் ஒரு சில நிறுவனங்கள்தான் அரசாங்கத்துக்கு எதிரான அரசியல்வாதிகளை வேட்டையாடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மகிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ச, நாமல் ராஜபக்ஷ மற்றும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்ததாவது,

தன்னை பொய்க் குற்றச்சாட்டுகளுக்குள் சிக்க வைத்ததாகக் கூறிய ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மோசடி மற்றும் ஊழல் விசாரணைப் பிரிவு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சிறைச்சாலை திணைக்களம் ஆகியவற்றின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளையும் சுமத்தினார். பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் தனக்கு பிணை வழங்குவதை எதிர்க்க வேண்டாமென சட்டமா அதிபரிடம் கூறுவதாக சபாநாயகர் தனக்கு வாக்குறுதி அளித்திருந்த போதும் சட்டமா அதிபர் திணைக்களம் அதற்கு செவிசாய்க்க மறுத்துவிட்டது.

அந்தத் திணைக்களம் முழுமையாக அரசியல் மயப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளதென்பது இதிலிருந்து தெரிவதாகவும். பெர்னாண்டோ மேலும் கூறினார்.

சதொசவின் 5.2 மில்லியன் ரூபாய் நிதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று முன்தினம் குருநாகலை உச்ச நீதிமன்றத்தால் விடு விக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் முழுமையாக அதிகாரங்களைப் பகிர வேண்டும்

## -பைஸர் வேண்டுகோள்-

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் முழுமையாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அதன் மூலமே அபிவிருத்தியின் அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அதிகாரங்கள் முழுமையாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே எனது எண்ணம். அவ்வாறு பகிர்ந்தளித்தால் மாத்திரமே உண்மையான அபிவிருத்தியின் அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியும்.

அவ்வாறு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தால் மோதல் ஏற்பட வாய்ப்பிருக்காது. அதுமாத்திரமன்றி கிராமப்புறங்களில் வாழும் மக்களின் பிரச்சினைகளுக்கு 'தீர்வும் கிடைக்கும்" எனத் தெரிவித்தார். (7)

# இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது

ஊரகஸ்மங்சந்தி பிரதேச இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த மாதம் 30 ஆம் திகதி ஊரகஸ்மங்சந்தி பிரதேசத்தில் இரு நபர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு பின்னர் கூரிய ஆயுதங்களால் தாக்கி கொலை செய்தமையுடன் தொடர்புடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 10.05 மணியளவில் குறித்த சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் 45 வயதுடையவர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 8 விதி எண் 1

சனி சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் பார்ப்பதற்கு குறுகுறுப்பான தோற்றமுடையவர்கள். சிந்தனை வளமிக்கவர்கள். முன்பற்கள் இரண்டும் பெரிதாக இருக்கும். சுமாரான உயரத்துடன் காட்சியளிப்பார்கள். சிலர் சதைப்பற்றுடன் காணப்படுவார்கள். இவர்களைப் பார்க்கின்ற போது சிறந்த ஞானிகள் போன்று தோன்றும். கடின உழைப்பாளிகள். நல்ல பொறுப்புள்ள மனிதர்களாத் திகழ்வார்கள். உலகம் அறிந்தவர்கள். பொது அறிவின் களஞ்சியமாவார்கள்.

சுதந்திரமாக வாழவே ஆசைப்படுவார்கள். புன்னகை பூத்த முகத்துடன் காட்சியளிப்பார்கள். தீவிரமான நடத்தையுள்ளவர்கள். பலமான தேகமுடையவர்கள். பிறரை மகிழ்ச்சியூட்டித் தானும் மகிழ்வார்கள். விஞ்ஞான அறிவு இருக்கும். அடிக்கடிப் பிரயாணம் மேற்கொள்வார்கள். ஆளுமையும், நிர்வாகச் சக்தியும் மிக்கவர்கள். இரகசியம் காப்பதில் வல்லவர்கள். புதுமையான பொருட்களைக் கண்டுபிடிப்பார்கள். ஆடம்பரக் கவர்ச்சிப் பொருட்களில் ஆர்வமிருக்கும். ஆன்மீக சிந்தனையிருக்கும். மற்றவர்களுக்கு எப்போதும் கட்டளையிட்ட வண்ணம் இருப்பார்கள். அனைத்தும் கற்றறிந்த ஆசான்கள். மனோசக்திகளை அடக்கியாளும் திறமையுடையவர்கள். எந்நேரமும் ஏதாவது திட்டங்களைத் தீட்டிக் கொண்டேயிருப்பார்கள். கற்பனை வளம் அதிகமிருக்கும். சதா யோசனையில் மூழ்கியிருப்பார்கள்.

உற்சாகம் ஏற்பட்டாலும் நீடித்திருக்காது. சுகம், துக்கம் இரண்டையும் சமமாகப் பாவிப்பார்கள். கெட்டிக்காரத் தனமிருக்கும். எதையும் நன்கு ஆராயும் மனமிருக்கும். மற்றவர்களைப் போல எளிதில் வெற்றி பெறுபவர்கள் அல்ல. கடுமையாக உழைத்துப் போராடி வெற்றி பெறுவார்கள். இல்வாழ்க்கையில் சோதனைகளைத் தாண்டிச் சாதனைகள் செய்வார்கள். மூளை பலம் அதிகமிருக்கும். எக்காரியத்திலும் தீவிரமாக உழைப்பார்கள். எல்லா விடயத்தையும் அறிந்து வைத்திருப்பார்கள். சுதந்திர உணர்ச்சி மிக்கவர்கள். பிறருக்கு எளிதில் கட்டுப்பட மாட்டார்கள். நூலறிவை விடவும் நுண்ணறிவே சிறந்தது என்று கூறுவார்கள். அன்புள்ளம் கொண்டவர்கள். பலபேருக்கு உதவுவதில் முன்னின்று நல்ல பெயரெடுப்பார்கள். பிறர் என்ன சொன்னாலும் தன்மனம் என்ன சொல்கின்றதோ அதன்படியே நடப்பார்கள்.

எவ்வளவு உயர்ந்த நிலைக்குச் சென்றபோதும் தனது பழைய வாழ்வு எதையும் மறக்க மாட்டார்கள். செய்கின்ற தொழிலைத் தெய்வமாக மதிப்பார்கள். பெண்கள் விடயத்தில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். சிற்றின்ப வேட்கை அதிகமிருக்கும். பொதுவாகவே இவர்கள் உடனிருக்கும் நபர்களாலேயே இவர்களை சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. தற்போது கூறும் சொற்களை மறந்து அப்படியே மாற்றிப் பேசுவார்கள். இளகிய மனம் படைத்த




இவர்கள் பல நேரங்களில் குடும்பத்திற்குத் தெரியாமல் பலருக்கு உதவும் நிலை ஏற்படும். இதனால் குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுவிடும். தான் துன்பப்பட்ட நேரத்தில் உதவியவர்களை மறக்காமல் உதவிகள் செய்வார்கள்.

பிறருக்கு தீங்கு செய்யும் காரியத்தில் இறங்க மனம் கூசும். சம்பாதிப்பதில் அதிக ஆர்வம் உடைய இவர்கள் தான் சொல்வது தான் சரியென்று அதிகம் வாதம் செய்வார்கள். இதனால் நண்பர்களிடம் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புவார்கள். புதிய புதிய திட்டங்கள் போட்டு சமுதாயத்தில் உயர்ந்து நிற்க வேண்டுமென்று உழைக்கக் கூடியவர்கள்.

பணவிடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வார்கள். கலையை இரசிக்கும் தன்மையுடையவர்கள். எதையும் சாதிக்கும் குணமுடையவர்கள். சிலநேரம் தன் தகுதிக்கு மிஞ்சின காரியங்களில் ஈடுபட்டு தோல்வி அடைவார்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து சேரும்.

சட்டம், மருத்துவம், விஞ்ஞானம், அரசியல், பேச்சு, எழுத்து, சினிமா போன்ற துறைகளில் சிறப்படைவார்கள். வாதமும், சர்வாதிகாரமும் இருக்கும்.

உற்சாகமாகப் பணியாற்றுவார்கள். கனத்த குரலுடையவர்கள். இயற்கைக் காட்சிகளைக் கண்டு இரசிப்பார்கள். எவ்வளவு வசதிகள் வந்தாலும் ஓயாமல் உழைத்துக் கொண்டேயிருப்பார்கள். பிரச்சினைகளில் சிக்கிப் பின்னர் மீண்டு விடுவார்கள். பெரும் பணக்காரர்கள் ஆவதே இவர்களின் இலட்சியமாக இருக்கும். சிலர் சமயத் தொண்டிலும், பக்தி மார்க்கத்திலும் இறங்கி விடுவார்கள். சிலருக்குப் போட்டியும், எதிர்ப்புக்களும் நிறைந்த வாழ்கை அமைந்துவிடும். சிலர் இரண்டு தாரமுடையவர்கள் ஆவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1,10,19,28,6,15,24,5,14,23.

துரதிர்ஷ்ட திகதிகள்
8,17,26,4,13,22,31.

அதிர்ஷ்ட நிறங்கள்
மஞ்சள், வெளிர்நீலம், சந்தனம், பொன்னிறம், நீலம், வெள்ளை.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, கோப்பிகலர், பாக்குநிறம், இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
நீலக்கல், மாணிக்கம், சூரியகாந்தக்கல், இந்திர நீலம், அக்கோமரின்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

74

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, நீர்கொழும்பு, புத்தளம் ஆகிய தமிழப் பிரதேசங்களிலும் போர்த்துக்கீசரின் படைகளும் சிங்களக் கூலிப்படைகளும் போர்த்துக்கீசரின் காவற்படைகளாக அமர்த்தப்பட்டிருந்தன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் 1627களில் கண்டி மன்னன் செனரத் போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தை இலங்கையில் இருந்து அகற்ற வேண்டும் என்ற தனது இறுதி முயற்சியைத் தொடங்குவதை அவதானிக்க முடிகிறது.

மேலும் அவனது கண்டிய இராச்சியத்தின் கிழக்குக் கரையோரங்களில் இருந்த துறைமுகப் பகுதிகளான திருகோணமலையையும், மட்டக்களப்பையும் போர்த்துக்கீசர் முறையே 1623, 1628களில் கைப்பற்றியிருந்தனர்.

இவ்விரு துறைமுகப் பிரதேசங்களையும் விடுவிப்பதன் மூலமே கண்டியைப் போர்த்துக்கீசரிடமிருந்து பாதுகாக்க முடியும் என்பது செனரத்துக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

எனவே யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றுவதன் மூலம்தான் திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களை வென்றெடுக்க முடியும் என்றும் செனரத் நினைத்திருக்கக்கூடும் என்பதனையே அவனின் யாழ்ப்பாண, மட்டக்களப்புப் படையெடுப்புக்கள் காட்டி நிற்கின்றன. யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னனாகிய சங்கிலி குமாரனுடைய மகனின் இரு புதல்விளை கண்டி மன்னன் செனரத்தின் இரு புதல்வர்கள் ஏற்கனவே திருமணம் செய்திருந்தார்கள்.

இந்த அடிப்படையில் செனரத் யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிக்கு அரசுரிமை கோரிப் போரில் ஈடுபடத் திட்டமிட்டிருந்தான். மிகவும் திறமை வாய்ந்த தளபதியான ஒலிவேறாவின் மரணம் செனரத்துக்கு நல்ல சந்தர்ப்பமாகக் காணப்பட்டது.

அத்தோடு யாழ்ப்பாணப் பிரதேச மக்கள், இயற்கையாகவே ஒலிவேறாமீது கொண்டிருந்த வெறுப்பினால் செனர த்தின் போர் நடவடிக்கைகளுக்கு மிக உற்சாகத்துடன் தமது பங்களிப்பைச் செய்ய முன்வந்தனர். 1628 இல் செனரத்தின் படையொன்று யாழ்ப்பாணம் சென்று, யாழ்ப்பாணத் தமிழர்களையும் சேர்த்து போர்த்துக்கீசருடன் போரில் ஈடுபட்டது.

16,புரட்டாதி 1628 இல் இரண்டு பாதிரிமார்கள் கொல்லப்பட்டனர். 30 க்கும் அதிகமான கத்தோலிக்கத் தேவாலயங்கள் அழிக்கப்பட்டன. ஆத்திரமடைந்த சைவ மக்கள் கத்தோலிக்க சிலுவைகள், புனித சின்னங்கள் போன்ற கத்தோலிக்க அடையாளங்கள் யாவற்றையும் எரித்துச் சாம்பாராக்கினர்.

ஒலிவேறாவின் பின் யாழ்ப்பாணத் தளபதியாக வந்த லங்கறேற்



மட்டக்களப்பு துறைமுகம்

“சிங்களப் படைகள் யாழ் ப்பாணத் திலிருந்து விரட்டப்பட் டன. மேலும், செனரத் 1629 இல் மட்டக்களப்பிற்கு படையெடுப்பொன்றை மேற் கொண்டான். டொம் நொறன்கா அப் படைகளை வெற்றி கொண் டான். இதே ஆண்டில் செனரத் மீண்டும் ஒரு படையெடுப்பை யாழ் ப்பாணத்தில் மேற்கொண்டான். இப் படையெடுப்பும் போர்த்துக்கீசரினால் வெற்றி கொள்ளப் பட்டது. சிங்களத் தளபதியும் போர்த்துக்கீசரினால் கொல்லப்பட்டான்”

த செயிசாஸ் (Lan Carate de Seixas) சிங்கள, தமிழ்ப்படைகளின் தீவிரம் கண்டு தனது படையுடன் பின்வாங்கிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டான். பதின் மூன்று நாட்களுக்கு மேலாக யாழ்ப்பாணம் சிங்கள, தமிழ்ப் போர்வீரர்கள் கையில் இருந்தது. சிங்கள, தமிழ்ப் படைகள் மீண்டும் கோட்டையைத் தாக்கின. அவ் வேளையில், செயிசாஸ் அப்படைகள் போருக்குப் பாவித்த ஆயுதங்களின் தன்மையைப் புரிந்து கொண்டு, தமது துப்பாக்கி மற்றும் வெடிபொருட்களை உபயோகித்து ஒரு திடீர்த் தாக்குதலை எதிர்ப்பினர் மீது நடத்தி அதில் வெற்றி கொண்டான்.

சிங்களப் படைகள் யாழ் ப்பாணத் திலிருந்து விரட்டப்பட்டன. மேலும், செனரத் 1629 இல் மட்டக்களப்பிற்கு படையெடுப்பொன்றை மேற் கொண்டான். டொம் நொறன்கா அப் படைகளை வெற்றி கொண்டான். இதே ஆண்டில் செனரத் மீண்டும் ஒரு படையெடுப்பை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டான்.

இப் படையெடுப்பும் போர்த்துக்கீசரினால் வெற்றி கொள்ளப் பட்டது. சிங்களத் தளபதியும் போர்த்துக்கீசரினால் கொல்லப்பட்டான். இதுவே யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசருக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட இறுதிப் படையெடுப்பாகக் காணப்பட்டது. இதன் பின்னர் போர்த்துக்கீசர் 1658 இல் இருந்து டச்சுக்காரரினால் வெற்றி கொள்ளப்படும் வரை யாழ்ப்பாணப் பிரதேசம் அவர்களுக்குப் பாதுகாப்பான, பிரச்சினைகள் இல்லாத பிரதேசமாகக் காணப்பட்டது.

போர்த்துக்கீச யாழ்ப்பாணத் தளபதி அன்கொறோட் த செய்யன் (Ancorote de Seiyan) ஐக் கொழும்புக்குப் போகும்படி வைஸ் ரோய் கட்டளையிட்டான். அவனுக்குப் பதிலாக யாழ்ப்பாணத்துத் தளபதியாக மிக்கேல் பெரைறா பொறல்ஹோ (Miguel Pereira Borroalho) நியமிக்கப்பட்டான்.

போர்த்துக்கீச புதிய வைரோ யாக அடொம் மிக்கேல் த நொறன்கா (Dom Miguel de Noranha) 1629 இல் நியமிக்கப்பட்டான். அம்புறோசியோ த கமாறா (Ambrosis de Freitas de Camara) என்பவன் யாழ்ப்பாணப் பிரதேசப் புதிய தோம்பை (காணிப் பதிவேடு) தயாரிக்கும்படி புதிய வைஸ்ரோயினால் அனுப்பப் பட்டான்.

மேற்கண்ட மாற்றங்கள் யாவும் 1630 இல் முடிவடைந்தன.

போர்த்துக்கீசர் தமிழ்ப் பிரதேசங்களில் எதுவித எதிர்ப்புமின்றி 1658கள் வரை ஆட்சி செலுத்தினர். வைகாசி 1656 இல் பின்னர் டச்சுக்காரர் கொழும்பை கைப்பற்றி விட்டனர். மேலும் டச்சுக்காரர் 18 மாசி 1653 இல் றிக்லாப் வன் கோயென்ஸ் (Rijcklaf Van Goens) தலைமையின் கீழ் 12 கப்பல்களிலும், 30 படகுகளிலும் 1100 படையினருடனும் மன்னாரில் வந்து இறங்கினர்.

22 மாசி 1658 இல் டச்சுக்காரர் எதுவித சிரமமுன்றி மன்னாரைப் போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றினர். இதன் பின்னர் 850 டச்சுக்காரப் படையினர் வன்னிப் பெருநிலப் பரப்பினூடாக பூநகரியைக் கடந்து யாழ்ப்பாணக் குடாநாட்டை வந்தடைந்தனர்.

பங்குனி 1658 இல், யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டனர். போர்த்துக்கீசப் படையினருக்குப் பின்வாங்குவதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை. காரணம், எதுவித உதவிப் படைகளும் இந்தியாவிலிருந்து வராதவாறு டச்சுக்காரர் தடை போட்டிருந்தனர். மூன்று மாதகாலம், உணவு, தண்ணீர், மருந்து என்பன முடிவுற்ற நிலையில், போர்த்துக்கீசப் படைகள், 24 ஆனி 1658இல் டச்சுக்காரரிடம் சரணடைந்தனர்.

இலங்கையின் தமிழ்ப் பிரதேசமும், தமிழ் மக்களும் கொதிக்கும் எண்ணெய்ச்சட்டியிலிருந்து, எரியும் அடுப்புக்குள் வீழ்ந்தது போல முதலாவது அந்நியரான போர்த்துக்கீசர் ஆதிக்கத்தாலும், அழிவிலும் இருந்து தப்பிச் சுரண்டலுக்குப் பெயர் போன ஐரோப்பியரான டச்சுக்காரரின் வலையில் சிக்கினர். இவைபற்றி எதிர்வரும் அத்தியாயங்களில் ஆராயப்படும்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று, போர்த்துக்கீசர் 1560களில் மன்னாரைக் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் 1591 இல் யாழ்ப்பாணத்தின் மேல் படையெடுத்து, அவ் இராச்சியத்தைத் தம் மேலாண்மையை ஏற்கச் செய்து, யாழ்ப்பாண மன்னனுடன் உடன்படிக்கையும் செய்துகொண்டனர். இறுதியாக 1619 இல் யாழ்ப் பாணப் பிரதேசம் முழுவதையும் போர்த்துக்கீசர் கைப்பற்றிக் கொண்டனர்.

மேலும், 1623 இல் திருகோணமலையும், 1628 இல் மட்டக்களப்பும் போர்த்துக்கீசரின் மேலாண்மையை ஏற்றிருந்தன. இதே காலகட்டத்தில் அப்போது தமிழ்ப் பிரதேசமாக இருந்த வடமேற்குப் பகுதியில், குறிப்பாக நீர்கொழும்பிலும் போர்த்துக்கீசர் கோட்டையைக் கட்டி அங்கு தமது போர் வீரர்களையும், சிங்களக் கூலிப் படைகளையும் பாதுகாப்பின் பொருட்டு அமர்த்தியிருந்தனர்.

(தொடரும்)

# மீண்டும் வீழ்ச்சியடைந்த இலங்.ரூபாயின் பெறுமதி

## மத்திய வங்கி தகவல்

(கொழும்பு)

இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வங்கி வெளியிட்டுள்ள புதிய அறிக்கைக்கு அமைய, 172.72 ரூபாயாக அமெரிக்க டொலரின் விற்பனை விலை பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கடந்த 15ஆம் திகதி ரூபாயின் பெறுமதி திடீரென அதிகரித்திருந்தது.

பல மாதங்களின் பின்னர் அந்த அதிகரிப்பு காணப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பழைய நிலைமைக்கு ரூபாய் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

நேற்று வரை டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 168.84 ரூபாயாக பதிவாகியுள்ளது.

15ஆம் திகதிக்கு முன்னர் ரூபாயின் பெறுமதி 172.90 ரூபாயாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# 28 ஆயிரம் வீடுகளை அமைக்கும் ஒப்பந்தம் இந்தியாவுக்கு கைமாறியது

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, முதற்கட்டமாக 28 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணி இந்தியாவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் அளித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தின் முதற் கட்டமாகவே, 28 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

1.2 மில்லியன் ரூபா செலவில் ஒவ்வொரு வீடும், அமைக்கப்படும்.

இந்தியாவின் என்டிஎன்டர்பிரைசஸ், இலங்கையைச் சேர்ந்த யப்கா டெவலப்பேர்ஸ் மற்றும் ஆர்ச்சிடியம் நிறுவனம் ஆகியனவே இந்த வீடுகளை அமைக்கும் பணியை மேற்கொள்ளவுள்ளன.

முன்னதாக, சீன நிறுவனத்துக்கு இந்த ஒப்பந்தம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

எனினும் இந்தியா வின் எதிர்ப்பை அடுத்து, இந்தப் பணி இந்திய - இலங்கை நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(7)

# நாட்டில் குற்றச் செயல்கள் குறைப்பு

# பொலிஸாரின் திறமைகள் குறித்த கௌரவத்தை ஊடகங்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் மத்தும கோரிக்கை

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு வழங்குவதற்கான விசேட திட்டம் தொடர்பிலும் அரசாங்கத்துடன் தாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.



நாட்டில் திட்டமிட்ட குற்றச்செயல்கள், பாலியல் வல்லுறவுகள், கொள்ளை, கொலை மற்றும் போதைப் பொருட்கள் தொடர்பான குற்றச்செயல்கள் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான குழுவினரை கௌரவப்படுத்த நாம் கடமைப் பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

மேல் மாகாண அழகியற்கலையரங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திறமையான வெளிப்படுத்தல்களைக் கொண்ட பொலிஸாருக்கு பொலிஸ்மா அதிபரின் நிதியத்தினால் வழங்கப்படும் பணப்பரிசில்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஏனைய ஊழியர்கள் போல் 8 மணிநேரம் மாத்திரம் கடமையாற்றுவோரல்ல பொலிஸார். இவர்கள் 24 மணிநேரம் கடமையாற்றினாலேயே நாட்டின் சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படுவதோடு சமாதானமும் சுதந்திரமும் நிலைப்படுத்தப்படும். இதுவே பிரஜைகள் சுதந்தரமாக வாழ கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இவ்வாறானவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். ஊடகங்கள் பிழைகளை சுட்டிக்காட்டுவதோடு நின்றுவிடாமல் பொலிஸாரின் திறமைகள் குறித்த கௌரவத்தையும் பெற்றுக் கொடுத்திட முன்வர வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (7)

# நாடாளுமன்றத்தில் விநியோகிக்கப்படும் உணவுகள் குறித்து சபாநாயகர் உத்தரவு

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்குள் 'விநியோகிக்கப்படும் உணவு மற்றும் குடிபானங்கள் தொடர்பில், முழுமையாக கண்காணிக்குமாறு சபாநாயகர் கரு ஜெயசூரிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக, சபாநாயகரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையிலேயே அதிகமாக உணவுகள் விரயமாக்கப்படுவது நாடாளுமன்றத்தில் தான் என கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்தையடுத்தே சபாநாயகர் கரு ஜெயசூரிய இந்த அறிவிப்பை நேற்று முன்தினம் விடுத்துள்ளதாக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1535

### பத்மராஜா

நிம்மதியைத் தேடி எங்கையும் போகவேண்டியதில்லை



ஏன்னா எங்க தேடினாலும் அதெல்லாம் கிடைக்கவே கிடைக்காது

### சிபிராஜ்


கோடி கோடியா பணம் இருந்தாலும்



சில்லறை இல்லைனா மதிக்கமாட்டாங்க பஸ்ஸில

### ராஜ்குமார்

அப்போதெல்லாம் செல்போன் வைத்திருந்தவர்களை ஆச்சரியமாகப் பார்த்த நாம்



இப்போது செல்போன் இல்லாதவர்களை ஆச்சரியமாகப் பாக்கிறோம்

### குமுதினி

கல்யாணம் பண்றதுக்காக காதலிக்காதீங்க காதலிப்பதற்காக கல்யாணம் பண்ணுங்க



வாழ்க்கை நல்லாயிருக்கும்

### தினேஷ்

பசங்க கைல பழங்கள் கிடைச்சா கம்முன்னு சாப்பிட்டுட்டுப் போயிடுறாங்க



இந்தப் பொண்ணுங்கதான் முகத்தில பூசலாமா, தலையில தேய்க்கலாமான்னு ஆராய்ச்சி பண்றாங்க

### நேத்ரன்

இப்படி பிளாஸ்ரிக், குப்பைன்னு எல்லாத்தையும் சாக்கடையில் வீசினால்



ஒருநாள் சாக்கடையும் உன் வீடு தேடி வரத்தான் செய்யும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை

## றிசாத் உறுதி



(கொழும்பு)

சமையல்எரிவாயுவின்விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

லிட்ரோ காஸ் லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும் அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோருக்கிடையில், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற சந்திப்பின் போதே, இந்த விடயத்தை திட்டவட்டமாக தெரிவித்த அமைச்சர் றிசாத் பதியுதீன், உலக சந்தையில், பெற்றோலிய பொருட்களின் விலை மாறுபட்ட வகையில், அடிக்கடி அதிகரித்தாலும், அரசாங்கம் எரிவாயு உட்பட நுகர்வுப் பொருட்களின் விலையை அதிகரிக்க இடமளிக்கமாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

"இந்த சந்தர்ப்பத்திலே உங்களது உதவியும்ஒத்துழைப்பும்எமக்கு மிகவும்முக்கியமானது. நுகர்வோரை பாதுகாப்பதற்கே நாம் முன்னுரிமை வழங்குகின்றோம்" இவ்வாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

"போக்குவரத்துச் செலவு உட்பட இதர செலவுகள் அதிகரித்து விட்டன. சமையல் எரிபொருட்களின் விலைச்சூத்திரத்துக்கு, இரண்டு தரப்பினரும் ஏற்கனவே இணங்கியிருந்த போதும், போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் காலத்துக்கு காலம் அதிகரித்து வருவதனால், சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பை மீளாய்வு செய்யுங்கள்" என்று அமைச்சர்களிடம், லிட்றோகாஸ் லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் அழுத்தமாகத் தெரிவித்தனர்.

2007 ஆம் ஆண்டு தொடக்கம், டீசல் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால், சமையல் எரிவாயுவைக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவும் படிப்படியாக அதிகரித்து விட்டது. எனவே, இலாப மீட்டலில் சரிவே காணப்படுகின்றது.

இந்த விலை அதிகரிப்பினால் தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு, மூட வேண்டிய அபாயத்துக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. எனவே, சமையல் எரிவாயுவின் விலையை மீளாய்வு செய்யுமாறு அவர்கள் இந்த சந்திப்பின் போது கோரிக்கை விடுத்தனர்.

"சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் தொடர்ந்தும் தமது சேவையை, நுகர்வோரை பாதிக்காத வகையில் மேற்கொள்ள வேண்டும். உலக சந்தையில், சர்வதேச மசகு எண்ணெயின் விலை உயர்வடைந்துள்ளதால், இலங்கையர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் நுகர்வோரை மேலும் பாதிப்படையச் செய்யும் வகையில், சமையல் எரிவாயுவின் விலையை அதிகரித்தால், அது நுகர்வோரை மேலும் கஷ்டத்துக்கு உள்ளாக்கும் என்று அமைச்சர் றிசாத் தெரிவித்தார்.

இதன்போது, லிட்றோ காஸ் லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் விலைச்சூத்திரம் தொடர்பான முன்மொழிவொன்றை அமைச்சரிடம் கையளித்தனர். அதனை பெற்றுக்கொண்ட அமைச்சர் றிசாத் பதியுதீன், வாழ்க்கை செலவு தொடர்பான அமைச்சரவையின் உபகுழுவிடம் சமர்ப்பித்து, இது தொடர்பில் பரிசீலிப்போம் என உறுதியளித்தார். (7)

# மரக்கறி விற்கும் பட்டதாரி

## தாய்க்காக மகள் தியாகம்





(கொழும்பு)

காலி, எல்பிட்டிய பொது சந்தையில் மரக்கறி விற்பனை செய்யும் பல்கலைக்கழக பட்டதாரி தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

2012ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பெண் ஒருவரே இவ்வாறு மரக்கறி விற்பனை செய்து வருகின்றார்.

நிலந்தி விக்ரமசிங்க என்ற பெயருடைய அவர் எல்பிட்டிய ஆனந்த வித்தியாலயத்தில் உயர் தரத்தில் சிறந்த முறையில் சித்தியடைந்து களனி பல்கலைக்கழத்தில் படிப்பை தொடரும் வாய்ப்பை பெற்றார்.

நிலந்தியின் சிறு வயதில் நாட்டில் நிலவிய யுத்த நிலை காரணமாக அவரது தந்தை காணாமல் போயுள்ளார். இந்நிலையில், கடுமையான சிரமத்திற்கு மத்தியில் தாய் அவரை படிக்க வைத்துள்ளார். அவர் விசேட பட்டம் பெற்ற பட்டதாரி என்ற போதிலும், இதுவரை அவருக்கு நல்லதொரு தொழிலும் கிடைக்கவில்லை.

தாய் உடல் நலமற்ற நிலையில் உள்ளமையினால் அவரை தனியாக விட்டுவிட்டு தூர பிரதேசத்தில் தொழில் தேடி செல்ல முடியவில்லை. இதனால் அவர் மரக்கறி விற்பனை செய்வதற்கு அவர் தீர்மானித்துள்ளார்.

தன்னுடன் படித்தவர்களுக்கு தாங்கள் ஊரில் நல்ல வேலைகள் கிடைத்த போதிலும் தனக்கு உரிய வேலை கிடைக்கவில்லை என அவர் கவலை வெளியிட்டுள்ளார். கிடைக்கும் வருமானத்தில் தாயை பாதுகாத்து வாழ்ந்து வருகின்றார்.

நிலந்தியின் செயற்பாடு குறித்து அந்தப் பகுதி மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். (7)

# சீனாவிடம் இருந்து இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)

சீனாவிடம் இருந்து நேற்று இலங்கைக்கு 1 பில்லியன் டொலர் நிதியுதவி கிடைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இலங்கை நாணயத்தை வலுப்படுத்தும் வகையிலும், வெளிநாட்டு நாணயக் கையிருப்பை அதிகரிக்கவும் இந்த நிதியுதவி பயன்படும் என்று கூறப்படுகிறது.

வெளிநாட்டு நாணய தவணை நிதியளிப்பு வசதியின் கீழ், கடந்த மார்ச் மாதம் 1000 மில்லியன் டொலருக்கான முன்மொழிவுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளிடம் இருந்து கோரப்பட்டன. இதற்கு நான்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளிடம் இருந்து முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அந்த முன்மொழிவுகள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழிநடத்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கடுமையான மதிப்பீடுகள் மற்றும் பேச்சுக்களை அடுத்து,சீன அபிவிருத்தி வங்கி தெரிவு செய்யப்பட்டது.

இதன் மூலம், இலங்கை அரசாங்கம் 1000 மில்லியன் டொலரை சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து நேற்று பெற்றுள்ளது. இந்தக் கடன் 8 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.(7)

# அத்தியாவசிய மருந்துகள் நீக்கப்படவில்லை

## சுகாதார அமைச்சர் ராஜித தகவல்



(கொழும்பு)

அத்தியாவசிய மற்றும் தரமுள்ள மருந்துகள் எதுவும் சந்தையில் இருந்து நீக்கப்படவில்லை என சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய மருந்துகள் சந்தையில் இருந்து நீக்கப்பட்டிருப்பதாக அண்மையில் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்தியில் எந்த உண்மைத்தன்மையும் இல்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான அடிப்படையான தகவல்களால் நோயாளிகள் பயம் மற்றும் சிரமத்துக்கு ஆளாவதாக டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இதுவரை 73 வகையான அத்தியாவசிய மருந்துகளின் விலை குறைக்கப்பட்டுள்ளதால், மருந்துகளின் பயன்பாடு நூற்றுக்கு 600 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# மலையக மக்களின் சம்பள விவகாரம்

## ஜனாதிபதியையடுத்து தொழில் அமைச்சரை சந்தித்த தமிழ் முற்போக்கு கூட்டணி

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினையை முன்வைத்து மலையகமெங்கும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்த தமிழ் முற்போக்கு கூட்டணியினர் நேற்று தொழில் அமைச்சர் ரவீந்திர சமரவீரவை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தொழில் அமைச்சு காரியாலயத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் மலைநாட்டு புதிய கிராமங்கள் உள்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவருமான பழனி திகாம்பரம், பிரதி தலைவரும் இராஜாங்க கல்வி அமைச்சருமான வி.இராதாகிருஷ்ணன், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தொழில் அமைச்சர் ரவீந்திர சமரவீரவுடன் தொழில் திணைக்கள ஆலோசகரும் கலந்து கொண்டிருந்தார். இச்சந்திப்பு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பழனிதிகாம்பரம்,

தோட்டத் தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க கோரி பரவலாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் ஜனாதிபதியை சந்தித்து மக்களின் கோரிக்கைகளை எடுத்துக் கூறியதோடு துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் தொழில் அமைச்சரை சந்தித்து தொழிலாளர்களின் கோரிக்கையின் நியாயங்களை எடுத்துரைத்தோம்.

தோட்டக் கம்பனிகள் தொடர்ந்தும் தாம் நட்டத்தில் இயங்குவதாக காரணம் காட்டி தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிக்க மறுத்து வருகின்றன. தற்போது ஐநூறு ரூபா மாத்திரமே அடிப்படை சம்பளமாக வழங்கப்படுகின்றது.

எனினும் கம்பனிகள் வெறும் 100 ரூபாவை மாத்திரமே அடிப்படை சம்பளமாக உயர்த்த முன்வந்துள்ளன. இது எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

அரசாங்கம் தோட்டங்களைப் பொறுப்பேற்று நடத்திய காலத்தில் தோட்டப்பகுதி உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கமே செய்து கொடுத்தது. எனினும் தற்போது பிராந்திய கம்பனிகளுக்கு கீழ் தனியாருக்கு வழங்கியதன் பின்னர் அவர்கள் எவ்வித உட்கட்டமைப்பு பணிகளிலும் தமது முதலீடுகளை செய்வதில்லை. அரசாங்கமே அனைத்து உட்கட்டுமான வசதிகளையும் வழங்கி வருகிறது. எனவே அதற்காக கம்பனிகள் செலவிட்டிருக்க வேண்டிய தமது இலாப பகுதியை தொழிலாளர்களுக்கு சம்பளமாக பகிர்ந்தளிப்பதே முறையாகும்.

இந்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தொழில் அமைச்சர் தலையீடு செய்து நியாயமான அடிப்படை சம்பளத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்என கோரிக்கை முன்வைத்தோம். எமது கோரிக்கைகளை செவிமடுத்த தொழில் அமைச்சர் தொழில் ஆணையாளரையும் அழைத்து அவரது கருத்துக்களையும் கேட்டறிந்தார். (7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 110 | 100 | 140 | 120 |
| தக்காளி | 100 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 120 | 120 |
| கரட் | 120 | 200 | 200 | 200 |
| பூசணி | 30 | 50 | 60 | 50 |
| புடோல் | 70 | 50 | 120 | 140 |
| வாழைக்காய் | 60 | 50 | 120 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 85 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 120 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 60 | 80 | 80 | 60 |
| கறிமிளகாய் | 180 | 120 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 160 | 160 | 140 |
| போஞ்சி | 200 | 240 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | – | 140 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 50 | 40 |
| தேசிக்காய் | 250 | 350 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 35-40 | 50-55 | 30-50 | 60 |
| இராசவள்ளி | 160 | 160 | 200 | 140 |
| வெங்காயப்பூ | 160 | 200 | 160 | 140 |
| முள்ளங்கி | 50 | 60 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 50 | 50 | 80 | – |




## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

# முதலையும் சிறுவனும்

### கதை


ஒரு சிறுவன் குளக்கரை ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது முதலை ஒன்று அவனது காலைக் கௌவிப் பிடித்து அவனைக் குளத்திற்குள் கொண்டுசெல்ல முயன்றது. சிறுவன் முதலையிடமிருந்து தன்னை விடுவிக்கப்போராடினான். முதலை சிறுவனை நீருக்குள் இழுத்துச் செல்லப் போராடியது. அப்போது அவ்வழியால் வந்த முயல் ஒன்று முதலையின் வாலைப் பிடித்துக் கொண்டது.

முதலைக்கு வாலைப் பிடித்ததால் தரையிலிருந்து நீருக்குள் சிறுவனை இழுத்துச் செல்ல முடியவில்லை. சிறுவனாலும் காலை விடுவிக்க முடியவில்லை. இவ்வாறு போராடிக் கொண்டிருக்கும் போது அவ்வழியால் வந்த கொக்கு இதனைக் கண்டது.

கொக்கு உடனடியாக சிறுவனது ஊருக்குள் சென்று விடயத்தைக் கூறியது. உடனடியாக ஊர்க்காரர் அவ்விடத்திற்குக் கத்தி, பொல்லுடன் விரைந்தனர்.

முதலையைக் கொன்று சிறுவனை மீட்டனர். முதலையிடமிருந்து மீண்ட சிறுவன் தன்னை முதலையிடமிருந்து காப்பாற்றிய முயலை ஊர்க்காரருக்கு அறிமுகப்படுத்தத்தேடினான். அப்போது அங்கே ஓர் மூலையில் சிறுவனின் வீட்டு நாய் முயலைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

அப்போது சிறுவன் திகைத்தபடி முயலைப் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கு வந்த கொக்கு கூறியது சில நேரங்களில் இப்படித்தான் உலகம். கவலைப்படாதே.




### கதை கூறும் கதை

எல்லா நேரங்களிலும் நாம் எதிர்பார்த்த விளைவுகளை மட்டும் பெற முடியாது. நம் எதிர்பார்ப்பின் படியே எல்லாமே அமைந்துவிடாது. நல்ல செயல்களுக்கு நல்ல விளைவு தான் கிடைக்கும் என்று இந்த உலகில் எப்போதுமே எதிர்பார்த்து விட முடியாது. எம்மையறியாமலே நாம் சில வேளைகளில் சில சிக்கல்களுக்குள் மாட்டிக் கொள்வதும் ஆபத்துக்களை எதிர்கொள்வதும் உண்டு.

எம் அனுபவத் திறனாலும் சிலவற்றை முன்னரே புரிந்து கொண்டு அதற்கேற்ப விலகி நடத்தலும் தவிர்க்க முடியாது எதிர்கொள்ள வேண்டியவற்றை நன்கு திட்டமிட்டுத் தீர்மானத்துடன் எதிர்கொள்வதாலும் பிரச்சினைகளிலிருந்து விலகிக் கொள்வது மட்டுமன்றி நல்ல விளைவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் முற்று முழுதாக நல்ல விளைவு தான் கிடைக்கும் என்று நம்பிவிட முடியாது. முற்றிலுமாக நம்பி நடந்தால் அது கிடைக்காத போது அதனை ஏற்றுக் கொள்ள முடியாதவராய் தவிக்க நேரிடும். நாம் எதிர்பார்த்த நல்ல விடயங்கள் எமக்குக் கிடைக்காது போவது தான் எமக்குள்ள கவலை. எந்தவொரு கடினமான விடயம் கூட அல்லது இழப்புக் கூட முன்னரே எதிர்பார்க்கப் பட்டதாக இருந்தால் அது எமக்குக் கவலையைத் தருவதில்லை.

ஆகவே உலக நியதிகளைப் புரிந்து சிந்தனைத் திறனும் பகுத்தறிவும் கொண்டவர்களாக வாழ்ந்தால் கவலை நீங்கப் பெற்றவர்களாக மகிழ்ச்சியுடன் வாழ முடியும். மகிழ்ச்சியாக இருப்பது என்பது அவரவர் மனதைப் பொறுத்தது. எல்லாம் உள்ளவன் என்றும் மகிழ்ச்சியோடிருப்பதில்லை. எதுவும் இல்லாதவன் என்றும் கவலையோடிருப்பதில்லை. எனவே மன மகிழ்ச்சிக்கு எது காரணம் என்று கேட்டால் விடை... அவரவர் கொண்டுள்ள மனமே! என்பதைப் புரிந்து கொள்வோம். எங்கள் மனங்களை நிறைவாக்குவோம் என்றும் மகிழ்வுடன் வாழ்வோம்.

# மனிதத்துவத்தின் ஆன்மா அகிம்சை



20 ஆம் நூற்றாண்டு மனிதப் பேரழிவுகளின் யுகம் இந்தப் பேரழிவுகள் ஏகாதிபத்திய நாடுகளின் போட்டிகளால் இரு தடவைகள் தேச விடுதலை மற்றும் சுதந்திரத்திற்கான போராட்டங்களால் ஏற்பட்டன.

இது இன்று வரை தொடர்வது தான் வேதனைக்குரிய விடயமாகும். ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு நாட்டினதும் சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்கவே பாடுபட்டார்கள்.

ஆனால் அவர்கள் தாம் கேட்டதை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை மறந்தது மட்டுமல்லாமல் அது தம்மால் பறிக்கப்படுகின்றது என்பதைப் பற்றியும் கவலைப்படாமல் இருந்தார்கள்.

ஆனரல் இக்காலத்தில் இவற்றில் இருந்து மாறுபட்டு மனிதநேயம், அறம், சத்தியம் ஆகியவற்றை முன்னிறுத்தி சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை எதிர்த்து மாபெரும் தேசத்தை வழிநடத்தி அதற்கு விடுதலையும் பெற்றுக் கொடுத்தார்.

அரை நிர்வாணபக்கிரி என வின்சன்ட் சேர்ச்சினாலும் மகாத்மாகாந்தி என்று உலகத்தவராலும் அழைக்கப்பட்ட மோகனதாஸ் ஹம் சந்த காந்தி ஆகும்.

1869 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி கத்ஞீயாவரியிலுள்ள (ஜொத) போர்பங்கர் எனும் சமஸ்தானத்தின் திவானின் மகனாகப் பிறந்தபோதும் இங்கிலாந்தில் பரிஸ்டர் கல்வியை முடித்து இந்தியா திரும்பிய அவர் சட்டத்தரணி தொழில் தோல்வியடைந்து தென்னாபிரிக்கா செல்லும் போது மனிதத்துவத்தின் அகிம்சை கோட்பாட்டை உலகிற்கு தரப்போகும் மகாத்மா அவர் என்பதை யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். 1906 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க் நகரில் இந்தியாவில் இருந்து குடியேறியவர்கள் கட்டாயம் பதிவுச்சட்டத்தை எதிர்த்து வாய்மை மற்றும் அகிம்சையை உறுதியாகக் கடைப்பிடித்து துன்புறும் மனித குலத்திற்கு அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியைத் திறந்து வைத்தார் காந்தி. அவர் அதனை சத்தியாக்கிரகம் என அமைத்தார். அதன் மூலமே இந்திய விடுதலையை சாத்தியமாக்கினார்.

மனிதத்துவமான போராட்ட வடிவத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். சத்தியம் என்ற வார்த்தையில் அன்பு என்ற பொருள் மறைந்திருக்கிறது.

ஆக்கிரக என்றால் உறுதி அல்லது சக்தி. ஆகவே சத்தியாக்கிரகம் என்றால் உண்மையில் இருந்தும் அன்பில் இருந்தும் அகிம்சையில் இருந்தும் பிறந்தது சக்தி என்பதாகும்.

எதிரியாக பாவித்து அவர்களைத் துன்புறுத்துவதையே பெரும்பாலான போராட்டங்கள் வழியாகக் கொண்டுள்ளன.

ஆனால் சத்தியாக்கிரகம் எதிரியையும் நேசிக்கச் சொல்கிறது. 1918 நாடியோட சத்தியாக்கிரக முகாமில் சத்தியாக்கிரகிகளுக்கான வழிகாட்டு நெறிக்ளில் இதை வலியுறுத்துகிறார் காந்தி.

சத்தியாக்கிரகத்தில் எவருக்கும் எதிராக கடுமையான வார்த்தையை பிரயோகிக்கக் கூடாது என்று அறிவுறுத்தும் அவர் எமது கருத்திலிருந்து மாறுபட்ட கருத்துக்கள் கொண்டவர்களை நாம் புறக்கணிக்கக்கூடாது அல்லது வெறுப்புடன் நடத்தக்கூடாது என்பதுடன் தந்திரமாக இல்லாமல் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருப்பதோடு எந்தவொரு சூழ்நிலையிலும் சத்தியாக்கிரகத்தில் ஆயுதங்களை உபயோகிப்பது அனுமதிக்கப்படலாகாது என்பதைக் கட்டாயமாகக் குறிப்பிடுகிறார்.

அகிம்சை என்றால் உலகப்பிரச்சினைகளை நேருக்கு நேர் சந்திக்காமல் அவற்றைத் தவிர்த்து ஓடி ஒளியும் ஒரு வழி என்ற மனப்பதிவு உள்ளது. அதுவும் கொலையும் வன்முறையும் மட்டுமே போராட்டத்திற்கும் விடுதலைக்குமான வழி என்றும் வீரம் என்றும் கற்பிக்கப்பட்ட எமது சமூகத்தில் அகிம்சை என்பது அடங்கிப் போகும் கோழைத்தனம் என்ற மனப்பதிவே அதிகமாகவும் வலிமையாகவும் உள்ளது.

தொகுப்பு:- கொக்குவில் பொது நூலகம்

தோற்றுப்போக நேர்ந்தால் கவலைப்படாதீர்கள். குறைகளை ஆராய்ந்து பாருங்கள்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாபெரும் வரலாற்று நிகழ்வு அணிதிரளுவது உங்கள் கடமை

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாத நிலைமை தமிழ் அரசியல் தலைமையின் கையாலாகத்தன்மை என்பதை இவ்விடத்தில் கூறியிருந்தோம்.

தமிழ் அரசியல் கைதிகளை முஸ்லிம் அரசியல் கைதிகளாக ஒருக்கால் நினைத்துப் பாருங்கள். அவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் முஸ்லிம் அரசியல் கைதிகளாக இருந்தால், அவர்களின் விடுதலை நல்லாட்சி பொறுப்பேற்ற அன்றே நடந்திருக்கும்.

அந்தளவுக்கு முஸ்லிம் அரசியல் தலைமை மிகவும் ஸ்திரத்தன்மையோடு தனது வகிபங்கை ஆற்றிவருகிறது. இதற்குப் பலவற்றை உதாரணங்களாக காட்ட முடியும்.

அதில் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படுகின்ற பல்கலைக்கழகங்களின் வடிவமைப்புகள் முற்றுமுழுவதும் இஸ்லாத்தை அடையாளப்படுத்துவதாக இருப்பதைக் காணலாம்.

அண்மையில்கூட கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக ஒரு முஸ்லிம் இனத்தவர் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய முஸ்லிம் அரசியல் தரப்பு அதனை நிறைவேற்றியும் உள்ளது.

ஆக, முஸ்லிம் அரசியல் தரப்பின் இராஜதந்திரத்துக்கு ஈடு இணையில்லை என்பதை நாம் ஈண்டு அவதானிப்பது கட்டாயமானதாகும்.

இதனைக் கூறுவதற்காக முஸ்லிம் அரசியல் தலைமையை நாம் குறைகூறுவதாக யாரும் பிழையாகப் பொருள் கொண்டு விடாதீர்கள்.

மாறாக முஸ்லிம் அரசியல் தரப்பிடம் இருந்து நாம் கற்க வேண்டிய பாடம் நிறையவே உள்ளது என்பதையே கூற விளைகின்றோம்.

அதாவது இந்த நாட்டின் சிறுபான்மை இனமாக இருக்கக்கூடிய முஸ்லிம் சகோதரர்கள் இலங்கை அரசுக்கும் தென்பகுதி அரசியல் கட்சிகளுக்கும் மிகுந்த அழுத்தத்தைக் கொடுக்கக்கூடிய வல்லமையைக் கொண்டுள்ளனர்.

ஆனால் தமிழ்த் தரப்பிடம் அத்தகைய அரசியல் வல்லமை இல்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

முஸ்லிம் அரசியல் தரப்பின் சிந்தனை முழுவதும் தம் இனத்தின் எழுச்சியும் வளர்ச்சியுமாக இருக்க, தமிழ் அரசியல் தரப்புகளோ தங்களைத் தாங்கள் அழித்துக் கொள்வதையே தங்கள் வாழ்நாள் நினைப்பாகக் கொண்டுள்ளனர்.

இதற்காக வடக்கு மாகாண சபையில் ஒரு முஸ்லிம் உறுப்பினரைக் கொண்டு முதலமைச்சரை வெளியேற்ற வேண்டும் எனக் கூற வைத்தார்கள் எனும்போது எங்கள் தமிழ் அரசியல் தரப்பின் நிலைமை எப்படியுள்ளது என்பது புலனாகிறது.

இங்குதான் தமிழ் மக்கள் இனியும் பொறுத்திருப்பது என்ற முடிவிலிருந்து விலகி தமக்கான அரசியல் பாதையை அமைத்துக் கொள்ளத் தயாராக வேண்டும்.

அந்த வகையில் தமிழ் மக்களின் இயக்கமாக இருக்கக்கூடிய தமிழ் மக்கள் பேரவை எதிர்வரும் 24ஆம் திகதி மாபெரும் மக்கள் ஒன்றுகூடலுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை ஏற்றும் ஒவ்வொரு தமிழ் மகனும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவிப்பதும் அறிவிப்பதும் கட்டாயமானதாகும்.

இந்தக் கடமையைச் செய்யும்போது தமிழ் மக்கள் தங்கள் உரிமையை வென்றெடுக்க ஒருபோதும் தயங்கவில்லை என்ற செய்தி உலகுக்கும் உரைக்கப்படும்.

# மகிந்தவின் தடுமாற்றம் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது

## ஐ.தே.க ஊடகப் பேச்சாளர் ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சிறியாணி பண்டாரநாயக்கவை பதவி விலக்கியமை தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவின் தடுமாற்றமே பாரிய சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் ஊடக பேச்சாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சி காலத்தில் நீதித்துறை சுயாதீனமாக செயற்பட்டது என்று எதிர் தரப்பினர் குறிப்பிடுவது நகைப்பிற்குரியது.

அக்காலக்கட்டத்தில் நீதித்துறை எவ்வாறு குடும்ப ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது என்பதை பெரும்பான்மையான மக்கள் நன்கு அறிவார்கள் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் பிரதம நீதியரசரின் பதவி நீக்கம் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவரால் நியாயமான மற்றும் முறையான பதிலினை குறிப்பிட முடியாமல் தடுமாறி விட்டார்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டே அவரை பதவி நீக்கம் செய்தோம் என்று குறிப்பிடுபவர்கள் அவர் மீது அக்காலகட்டத்தில் சாட்டிய குற்றத்தினை முறையாக குறிப்பிடவில்லை எனவும் தெரிவித்தார். (ம)

### நாடளாவிய ரீதியில் 24 மணிநேரத்தில்

## விபத்தில் நால்வர் பலி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவு பெற்ற 24 மணிநேரத்துக்குள் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன விபத்துக்களில் இருவரும் முச்சக்கரவண்டி விபத்தில் ஒருவரும் பாதசாரி ஒருவரும் உள்ளடங்கலாக நால்வரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்துக்கள் பாதுக்க, மொறகஹன, அஹங்கம மற்றும் குளியாப்பிட்டிய ஆகிய பகுதிகளில் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது. (ம)

## பொதுமக்களுக்கு எதிராக யுத்தம் செய்யவில்லை

### என்கிறார் கோத்தா

சிறுபான்மையினத்தவர்கள் என்னை வெறுக்க வேண்டிய காரணமில்லை என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விசேட நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நான் பாதுகாப்பு செயலாளராகயிருந்தவேளை யுத்தத்தை பொதுமக்களிற்கு எதிராக முன்னெடுக்கவில்லை, பயங்கரவாதிகளிற்கு எதிராகவே முன்னெடுத்தேன் என அவர தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவ அதிகாரி என்ற வகையில் நான் நாட்டிற்கு சிறந்த முறையில் பணியாற்றியிருக்கின்றேன் என கருதுகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

### புலிகள் தொடர்பில் சர்ச்சைக் கருத்தை தெரிவித்த

## விஜயகலாவுக்கு எதிரான வழக்கு டிசம்பர் 07ஆம் திகதிவரை ஒத்திவைப்பு

விடுதலைப் புலிகள் தொடர்பில் சர்ச்சைக் கருத்தை தெரிவித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிரான வழக்கு டிசம்பர் 07 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணையானது கொழும்பு பிரதான நீதவான் ரங்க திசாநாயக்க முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த விசாரணையின் போது, குறித்த விடயம் தொடரபாக விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு அனைத்து அறிக்கைகளும் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக திட்டமிட்ட குற்ற விசாரணைப் பிரிவு மன்றில் தெரிவித்தது.

அதன்படி வழக்கை ஒத்தி வைத்த நீதிமன்றம் டிசம்பர் 7ஆம் திகதியன்று முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கை மேலோங்க வேண்டும் என சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட விஜயகலா மகேஸ்வரன் கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ்., மன்னார் காணி விடுவிப்பு கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

காணி விடுவிப்பு குறித்து ஆராய எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த கலந்துரையாடல் எதிர்வரும் 29ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதேநேரம், மன்னாரில் எதிர்வரும் 25ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த கலநதுரையாடல் எதிர்வரும 27ஆம் திகதி முற்பகல் 9.30க்கு பிற்போடப்பட்டுள்ளது என வட மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருநது மாலை 5.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் பாலாவோடை இணுவில், டச்சு வீதி, உடுவில், சங்குவேலி, மருதனார் மடம் ஒருபகுதி, சுன்னாகம் இலங்கை வங்கி பிரதேசம், அம்பலவாணர் வீதி, யாழ் பல்கலைகழக நுண்கலைப் பீட பிரதேசம், ஆக் வீதி உடுவில், சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## மாணவர் ஊக்குவிப்பு நிகழ்ச்சி

மறைந்த பேராசிரியர் கென்னடி விஜயரட்ணத்தின் நினைவாக சுந்தரமூர்த்தி சிறி முத்துக்குமரனின் அனுசரணையில் மாணவர் ஊக்குவிப்பு நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.காரைநகர் இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் திருமதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம், சிறப்பு விருந்தினராக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.குமரேசமூர்த்தி, கௌரவ விருந்தினர்களாக இரத்மலானை, ஶ்ரீலங்கா ரெலிக்கொம் உதவிப் பொறியியலாளர் ஆ.சு.மோகன்ராஜ், காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன் ஆகியோர் கலந்து கொள்வர். (7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- தாயும், தந்தையும் எப்போது மகிழ்ச்சி அடைகிறார்களோ. அப்போது கடவுளும் மகிழ்ச்சி அடைகிறார். அதனால், பெற்றோர் பெருமை கொள்ளும் விதத்தில் வாழுங்கள்.
- அறிவோடு ஒன்றிவிடும்போது தான் பிழைகளைப் போக்க முடியும். இந்த முடிவை அறிவியலும் ஏற்றுக் கொள்கிறது.
- தன்னைத் தானே வெறுக்கத் தொடங்கும் மனிதனுக்கு. அழிவுக்கான வாசல்கள் திறக்கப்பட்டு விட்டதாகப் பொருள்.
- அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியை கொண்டு வந்தே தீரும்.
- தன்னிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப்போல. அதை விலக்கும் சக்தியும் மனதிற்கு உண்டு. அதனால் வேண்டியதை ஏற்கவும், வேண்டாதவற்றை தள்ளவும் செய்யுங்கள்.
- கருணையே இனிமையான சொர்க்கம். மக்கள் அனைவரும் கருணை நிறைந்தவர்களாக மாறினால் பூமியே சொர்க்கமாகி விடும்.
- ஒன்றைப் பெற்றுக் கொள்பவனுக்குப் பெருமை இல்லை. கொடுப்பவன்தான் பேறு பெற்றவனாகிறான்.

# அமரர் சத்தியமூர்த்தி நினைவுக்கிண்ணம்

## வெற்றி பெற்றது கிளி.மகாவித்தியாலயம்





1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி இந்துக்கல்லூரி மீதான விமான குண்டு தாக்குதல் நடந்த வேளை கல்லூரி மாணவர்களை ஒழுங்குபடுத்தும் போது இறந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன் அமரர் கனகசிங்கம் சத்தியமூர்த்தியின் நினைவாக 06 ஆவது மாபெரும் உதைபந்தாட்ட போட்டி நடைபெற்றது.

கால்பந்தாட்டப்போட்டியில் நடப்புச்சம்பியனாகிய வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் வெற்றிபெற்று கிண்ணத்தை தன்வசப்படுத்தியது கிளிநொச்சி மகாவித்தியாலய அணி. கிளிநொச்சி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணி வீரர்களும் தலா ஒவ்வோர் கோல்களை பெற்ற நிலையில் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் 4 இற்கு 5 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது கிளிநொச்சி மகாவித்தியாலய அணி. போட்டியின் ஆட்ட நாயக கிளி.மகாவித்தியாலய அணியின் நிலக்சன் தெரிவானார்.

குறித்த நிகழ்வு கல்லூரி ஆசிரியர் சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இங்கு விருந்தினர்களாக கரைச்சி பிரதேசசபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், அமரர் சத்தியமூர்த்தியின் தாயார் க.சரஸ்வதி.வவுனியா உதவி கல்வி பணிப்பாளர் க.சத்தியசீலன், இந்தியாவில் இருந்து வந்த தேவஸ் காந்தி அடிகளார் மற்றும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (க)



2018 இற்கான 43 ஆவது இலங்கை தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 13.14 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் 12 வயதுப்பிரிவு போட்டியில் பூநகரி சிறி விக்னேஸ்வரா பாடசாலை மாணவன் இருதயராசா ஜெனிஸ்ரன் காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கமும் குமித்தே போட்டியில் வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளார். (க)

# மன்னார் ஜோசப்வாஸை வீழ்த்தி அரையிறுதியில் கிளிநொச்சி உதயதாரகை




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 கடந்த ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வடமாகாண ரீதியில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 24 கழகங்கள் பங்குபற்றுவதுடன், போட்டிகள் விலகல் முறையில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் மன்னார் ஜோசப்வாஸ் அணியை எதிர்த்து கிளிநொச்சி உதயதாரகை அணி மோதியது. இதில் உதயதாரகை அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று, அரையிறுதிக்குள் நுழைந்தது. (க-26)

# யாழ்.சுப்பர் லீக்-2018



யாழ்.சுப்பர் லீக் 2018 தொடருக்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம், யாழ். நகரில் IPL வடிவில் போட்டியை நடத்த உள்ளனர்.

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 26 கழகங்களிலிருந்து பதிவு செய்யப்பட்ட வீரர்களாகவும் தொடருக்கு விண்ணப்பித்தவர்களிலுமிருந்து 15 பேர் கொண்ட 8 அணிகளை ஏலத்தின் மூலம் 8 முகவர்கள் தெரிவு செய்தனர்.

அதில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்திலிருந்து 7 பேர் தெரிவு செய்யப்பட்டனர். வி.றஜீவ்குமார், வை.நிரோஜன், ஆர். லதூசன் ஆகியோர் பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் எஸ்.சுபா தீஸ் நல்லூர் புறொன்கொஸ் அணிக்கும் எம்.கிஷாந்தன் பண்ணை டில்கோ கிளாடியேற்றர்ஸ் அணிக்கும் வி.சலீஸ்ரன் யாழ். பந்தர்ஸ் அணிக்கும் எஸ்.மதூஸன் அரியாலை வொரியர்ஸ் அணிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க)

# யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் ஹொக்கிச் சுற்றுப்போட்டிகள்

யாழ்ப்பாணம் ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டிலும், றொட்டரிக் கழகத்தின் அனுசரணையிலும், அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னெல் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த சுற்றுப்போட்டியில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யூனியன் விளையாட்டுக்கழகம், கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம், ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்.ஸ்ரார்ஸ் விளையாட் டுக்கழகம், நியூ வோரியர்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் ஓல்ட் கோல்ட் விளை யாட்டுக்கழகம்ஆகியன பங்குபற்றுகின்றன.

போட்டிகள் யாவும் நொக்கவுட் முறையில் இடம் பெறவுள்ளன. (க-26)

## யாழில் நடைபெறவுள்ள பிறிமியர் லீக் இறுதிப்போட்டி

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு -1 அணிகளுக்கிடையிலான பிறிமியர் லீக் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியானது எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்த இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து பேருவளை கிரேட் ஸ்ரார்ஸ் அணி மோதவுள்ளது. (க-26)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டக் கொண்டாட்டம்

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டக் கொண் டாட்டம் - 2018 எனும் தொனிப் பொருளிலான உதைபந்தாட்டத் தொடர் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்றைய போட்டியில் காலை 10 மணிக்கு ஞானகலா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக்கழகமும் 11 மணிக்கு ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழமும் 12 மணிக்கு சென். நீக்கிளஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தளம் எவரஸ் விளையாட்டுக்கழமும் 1 மணிக்கு வளர்மதி விளையாட்டுக்கழத்தை யாட்டுக்கழக்மும் 2 மணிக்கு பொறப்பதி விளையாட்டுக்கத்தை எதிர்த்து யாழ். பாரதி விளையாட்டுக்கழகமும். 3 மணிக்கு யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தளம் விக்னேஸ்வரா விளை யாட்டுக்கழகமும் 4 மணிக்கு அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அன்னை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

## எதிர்கால அரசியல்...

தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்குறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்குரிய உரித்துக்கள் முதலில் உறுதிசெய்யப்பட வேண்டும். அதன் பின்னர் அபிவிருத்திப் பணிகளை துரிதமாக முன்னெடுக்க முடியும் என்பதே எமது கொள்கை வழிச் சிந்தனை என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தலைமைத்துவ ங்களின் தவறுகளை நாம் இனிமேலும் விடக் கூடாது என்பதில் நான் திடமாக உள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழர் விடுதலைக் கூட்டணி பல கட்சிகளின் ஒரு கூட்டாக பலம் வாய்ந்த ஒரு அமைப்பாக உருவாக்கம் பெற்ற போது அதன் தலைமைகள் சந்தர்ப்பங்களை நழுவவிட்டு நாடாளுமன்ற பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்த போது ஆட்சியாளர்களுக்கு நிபந்தனைகள் எதுவுமற்ற ஆதரவை நல்க முற்பட்டதனூடாக அரசின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டது.

தமது அரசியல் தீர்வு விடயங்களை சுமுகமாக கையாள முடியும் என்ற எதிர்ப்பை எமது தலைவர்கள் கொண்டிருந்தனர். ஆனால் அது கை கூடவில்லை. ஏனென்றால் அதே பிழையை தற்போது எமது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைகளும் செய்து வருகின்றனர். வரலாற்றில் இருந்து தமது பிழைகளை இனங்காண மறுக்கின்றார்கள். எமது அரசியல் வரலாற்றில் சேர். பொன்.இராமநாதன் தொடக்கம் இரண்டாயிரமாம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணித்.தலைமை வரையான தமிழ் அரசியல் தலைவர்கள் சிறந்த புத்திக்கூர்மையுள்ளவர்களாக இருந்த போதும் எப்போதுமே மேலாதிக்கச் சிந்தனையுடன் செயற்பட்ட சிங்களத் தலைமைகளுக்கு எம்மவரின் அரசியல் நோக்கங்களைப் புரிந்து கொள்வதற்கும் தமிழ்த் தலைமைகளைப் பிரித்தாளும் தன்மைகளை மேலோங்கச் செய்வதற்கும் முடியுமாக இருந்தது.

காரணம் எமது தலைமைகள் புகழ்ச்சிக்கும் மாய்மாலத்துக்கும் எடுபடக் கூடியவர்கள். பேரறிஞரான கணிதவியல் பேராசிரியரான சி.சுந்தரலிங்கம் சிங்களத் தலைவர்களின் புகழ்ச்சியில் மயங்கி தம் இனத்துக்குக் கெடுதல் விளைவித்த "சிங்களவர் மட்டும்" அமைச்சர் குழாமை அமைக்க அடி எடுத்துக் கொடுத்தார்.

அவ்வளவுக்கும் 5-ம் தரத்திற்கு மேல் படிக்காத சிங்களத் தலைவர் ஒருவர் பேராசிரியரை "உன்னை விட இந்த வையத்துள் யாருண்டு" என்று கேட்டதால் அதில் மயங்கி தனது கணக்கியல் திறனை அவருக்குக் காட்டி விட்டார்.

இப்பொழுது எங்கள் தலைமைத்து வத்தினரிடையேயும் தம்மை விட எவரும் இல்லை என்ற சிந்தனை இருந்து வருகின்றது. இவ்வாறான சிந்தனை உடையவர்களைச் சிங்களத் தலைவர்கள் இலேசாகத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளுகின்றார்கள்.

இன்று பலரும் அரசுடன் இணைந்து கொண்டு அபிவிருத்திகளை மேற்கொள்ளவில்லையென்று என்னைப் பேசுகின்றார்கள். ஆனால் தமிழ் மக்களுக்குரிய உரித்துக்கள் முதலில் உறுதிசெய்யப்பட வேண்டும். அதன் பின்னர் அபிவிருத்திப் பணிகளை துரிதமாக முன்னெடுக்க முடியும் என்ப தே எமது கொள்கை வழிச் சிந்தனை.

உரித்துக்கள் எதுவும் உறுதி செய்யப்படாத நிலையில் வழங்கப்படுகின்ற அபிவிருத்திகள் அனைத்தும் ஏதோ ஆட்சியாளர்களின் அன்பளிப்புக்களாக கருதப்படுமேயன்றி அது தமிழர்களின் உரித்துக்களாக கொள்ளப்படமாட்டா. நாம் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்ட நிலையிலேயே இருக்க நேரிடும்.

எமது இனம் எப்படிப்போனாலும் பரவாயில்லை அபிவிருத்திகள் மட்டும் நடைபெறவேண்டும் என நான் சிந்தித்திருப்பின் எனது தனிப்பட்ட நட்புக்களினூடாக பலவற்றை சாதித்திருக்க முடியும். கொழும்பில் பிறந்து வளர்ந்தவன் நான். அங்கு கல்வி கற்றவன். ஆனால் எதிர்காலத்தில் நானும் ஒரு வரலாற்றுத் தவறை இழைத்தவனாகவே கொள்ளப்படுவேன்.

இதனால்தான் எனது தனிப்பட்ட நட்புக்களையும் துறந்து உரித்துக்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றேன். அண்மையில் ஜனாதிபதி தமிழ்த் தலைவர்களுள் என்னை மட்டும் தனது செயலணியில் சேர்த்திருந்தார். ஆனால் எமது உரிமைகளைக் கேட்டு நான் செயலணியைப் பகிஷ்கரித்துள்ளேன்.

எனினும் தமிழ்த் தலைமைத்துவங்களின் தவறுகளை நாம் இனிமேலும் விடக் கூடாது என்பதில் நான் திடமாக உள்ளேன் என மேலும் தெரிவித்துள்ளார். (ம-9)

## யாழ்.படைமுகாம்களை...

காணிகளில் அமைந்துள்ள படை முகாம்கள் மற்றும் பயன்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு மாற்றுக்காணிகளும், ஒரு பில்லியன் நிதியும் தேவையாக உள்ளது. நிதி விபரத்தை அரசின் கவனத்திற்கு சமர்ப்பித்துள்ளோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவிற்கு அமைய, பொது மக்களின் காணிகளை மீள கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அதற்குரிய நிதி கிடைக்கும் பட்சத்தில், இவ்வருட இறுதிக்குள் காணிகளை பொது மக்களிடம் மீள வழங்க முடியும் என மேலும் தெரிவித்தார்.

தனியார் காணிகளை விடுவிப்பதற்கு, பாதுகாப்பு தரப்பினர் மாற்றுக்காணிகளை அடையாளம் கண்டு, அதற்கான திட்டங்களை முன்வைக்கும்போது, அதற்கு தேவையான பணத்தை அரசாங்கம் விடுவிக்க தயாராக இருப்பதாக, பாராளுமன்றில் நடைபெற்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சரவை ஆலோசனை கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9.101)

## பிரதமர் ரணில் விக்கிரம...

சிங்கவிற்கும் இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கும் இடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

புதுடில்லி நகர தாஜ் ஹோட்டலில் நேற்று இந்த சந்திப்பு இடம்பெற்றது.

காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலாநிதி மன்மோகன் சிங், சோனியா காந்தி மற்றும் ஆனந்த ஷர்மா ஆகியோர் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டதுடன், பிராந்திய பொருளாதார மற்றும் அரசியல் போக்குகள் தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இலங்கையில் செயற்படுத்தப்படும் சமூக நலனோம்புகை வேலைத்திட்டங்கள் தொடர்பான விடயங்களை அறிந்துகொள்வதில் காங்கிரஸ் பிரதிநிதிகள் இதன்போது ஆர்வம்காட்டினர்.

எதிர்கால ஆசியாவின் தோற்ற அமைப்பு மற்றும் செயல்திறன் தொடர்பாகவும், தீவிரவாதத்தை ஒழிப்பதன் தேவை தொடர்பாகவும் இதன்போது கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொளளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராகுல் காந்தி தலைமையிலான காங்கிரஸ் தூதுக் குழுவினருக்கு அழைப்பு விடுத்ததுடன், அவர்கள் நன்றியுடன் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டனர்.

புதுடில்லி நகர ஹைதராபாத் மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க, அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, பிரதம அமைச்சரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் சித்ராங்கனீ வாகீஷ்வர மற்றும் பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர் சமன் அதாவுதஹெட்டி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)

## புலிகளின் ஆயுதங்களை...

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் மீண்டும் விசேட மேல் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ நினைவு நூதனசாலை நிர்மாணத்தில், 33 மில்லியன் ரூபாய் முறைகேடு செய்யப்பட்டமை உட்பட ஏழு குற்றச்சாட்டுகள் குறித்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்றைய வழக்கு விசாரணை இடம் பெற்றது.

குறித்த வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் முன்னிலையான கோத்தபாய ராஜபக்ஷவிடம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டமை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த கோத்தபாய, விடுதலைப் புலி இயக்கத்திற்காக கொண்டுவரப்பட்ட ஆயுதங்களைப் பலர் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், அந்த ஆயுதங்களையே, பாதாள உலகக் குழுவினர் பயன்படுத்தி வருவதாகவும் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கோத்தபாய ராஜபக்ஷ கடந்த செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி முதன் முறையாக மூன்று நீதிபதிகளைக் கொண்ட நிரந்தர நீதாய மேல் நீதிமன்றில் முன்னிலையானமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## மக்களின் காணிகள் பற்றி...

ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளை எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் காணி உரிமையாளர்களிடம் வழங்க வேண்டும் என கடந்த வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த பணிப்புரைக்கு அமைய, இராணுவத்தினர் வசமுள்ள சுமார் 500 ஏக்கர் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் அவற்றை பொதுமக்களுக்கு மீள கைய்ளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதிக்குள் வடக்கில் 88,599 ஏக்கர் காணிகளும், கிழக்கில் 61,126 ஏக்கர் காணிகளும் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தற்போது வடக்கில் 11,557 ஏக்கர் காணியிலும், கிழக்கில் 3,225 ஏக்கர் காணியிலுமே இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதாகவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து சுட்டிக்காட்டினார்.(ம)

## ஜனாதிபதியை கொல்ல...

ராம் தெரிவித்துள்ளார்.

அவர்கள் மறுப்பு தெரிவிக்கட்டும் அதற்கு இடமளியுங்கள். கருத்து வெளியிட்டதன் மூலம் பூச்சி புழு போன்று வளைகின்றார்கள்.

எனினும் எமது செய்தியாளர் தகவல்களை உறுதி செய்து மிகவும் சரியாக செய்தியை அறிக்கையிட்டுள்ளார் என ராம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (ம)

## நாலக டி சில்வாவிடம்...

ஆஜராகிய அவர் மாலை 6 மணியளவில் அங்கிருந்து வெளியேறினார்.

அவரிடம் வாக்குமூலம் பெறும் நடவடிக்கை தற்போது நிறைவடைந்துள்ளதாகவும், மீண்டு மேலதிக விசாரணைகளுக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கூறியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கொலை திட்டம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு தொடர்பிலேயே அவரிடம் இரண்டாவது நாளாக விசாரணை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மாணவர்களுக்கு...

போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீய விளைவுகள் தொடர்பிலான அறிவையும் தெளிவையும் பாடசாலை கல்வியினூடாக பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

புலதிசிபுர தேசிய கல்வியியற் கல்லூரியின் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று அனைத்து உலக நாடுகளும் சுற்றாடல் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, எமது நாடு எதிர்நோக்கியுள்ள இந்த சவால்களிலிருந்து சமூகத்தை விடுவிப்பதற்காக பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் ஒன்றுபட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார்.

பிள்ளைகளின் அறிவை வளர்ப்பது போலவே, அவர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிள்ளைகளுக்கு எதிரான சவால்களிலிருந்து அவர்களை விடுவிப்பதுடன், தேசத்தின் எதிர்காலத்திற்காக நல்லொழு க்கத்துடன் கூடிய மாணவ சமுதாயத்தை கட்டமைக்கும் பொறுப்பு தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தார். (ம)

### மெகா பவர்

திகதி 2018/10/19
சீட்டிழுப்பு இலக்கம் 294
வெற்றி எழுத்து கப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
K 21 03 26 49 55
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2018-10-19
சீட்டிழுப்பு இலக்கம் 64
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 33 37 61 80
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2018/10/19
சீட்டிழுப்பு இலக்கம் 3771
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
T 8 0 2 7 8 6
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.10.19
சீட்டிழுப்பு இலக்கம் 1917
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
N 14 23 36 73
தேசிய லொத்தர் சபை

## குளத்தில் தவறி...

மாணவர் ஒருவர் நேற்றைய தினம் பாடசாலையில் நடைபெற்ற வாணி விழாவில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பிய நிலையில் தங்களுடைய நெல் வயலுக்கு சென்றுவிட்டு தனியாக வீடு திரும்பும் வழியில் நெல் வயலுக்கு வீசப்பட்ட உரத்தின் பையைக் கழுவுவதற்காக வைரவ மூன்று முறிப்புக் குளத்தின் அணைக்கட்டில் நின்றவாறு உரப் பையைக் கழுவிய போது சமநிலை தடுமாறி குளத்தினுள் வீழ்ந்து குளத்தினுள் இருந்த அகழிக்குள் சிக்குண்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் ஈச்சங்குளம் கல்மடு பூம்புகார் கிராமத்தைச் சேர்ந்த தேவகுமார் அனுசன் (வயது14) என்ற சிறுவனே பரிதாபகரமாக குளத்தில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்குச் சென்ற ஈச்சங்குளம் பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-15)

## யாழில் வழிப்ப...

யப்பட்டனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் குடு போதைப் பொருள் பாவனையால் நண்பர்களாகினர். குடு பாவனைக்காக வழிப்பறியில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் அண்மைய நாள்களில் வழிப்பறி கொள்ளைகள் இடம்பெற்றன. வீதியால் சென்ற பெண்களிடம் நகைகள் மற்றும் கைப்பைகள் பறிக்கப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. அவற்றின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேகநபர்கள் இருவரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்தனர்.

கொள்ளையிடப்பட்ட நகைகளை சந்தேகநபர்கள் நகைக் கடையொன்றில் விற்பனை செய்துள்ளனர். அவை உருக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அத்துடன், பெண் ஒருவரின் கைப்பையும் சந்தேகநபரிடம் கைப்பற்றப்பட்டது. அதற்குள் இருந்து வெளிநாட்டு நாணயத்தாளும் மீட்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த பதில் நீதவான், சந்தேகநபர்கள் இருவரையும் வரும் 25-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம)

## விக்னேஸ்வரன்...

திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த மேன்முறையீட்டு மனு, ஈவா வனசுந்தர, பிரசன்ன ஜயவர்தன மற்றும் எல்.ரீ.பீ.தெஹிதெனிய ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகளுக்கு நீதியரசர் தெஹிதெனிய ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ள நிலையிலேயே மனு மீதான விசாரணைகள் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பா.டெனீஸ்வரனினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அவருக்கு அமைச்சு பதவியை எந்தவித இடையூறும் இன்றி முன்னெடுக்க இடமளிக்குமாறு இடைகால தடை உத்தரவு பிறப்பித்துள்ளதாக தெரிவித்தே வடமாகாண முதலமைச்சர் சி.வி,விக்னேஸ்வரன் உயர்நீதிமன்றத்தின் மனுவொன்றை. தாக்கல் செய்திருந்தார்.

அவ்வாறான உத்தரவை பிறப்பிப்பதற்கான அதிகாரம், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு கிடையாது எனவும் அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வாள்வெட்டுக்...

நேற்றைய தினம் பருத்தித்துறை, துன்னாலைப் பகுதிகளைச் சேர்ந்த மேலும் சிலருடன் ஆயுதங்களுடன் மோதலுக்கு வந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் வாகனம் திருத்தும் நிலையத்திற்கு முன்பாக ஆயுதங்களுடன் வந்த குழுவினர் இன்னொரு இளைஞனைத் தாக்கி வாளால் வெட்டியுள்ளனர்.

இதனை அவதானித்த வாகன திருத்தக உரிமையாளரான 53 வயதான நபர் கடைக்கு முன்பாக சண்டையிட வேண்டாம் என எச்சரித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த குழுவினர் குறித்த உரிமையாளரையும் கம்பிகள், பொல்லுகளால் தலையில் பலமாகத் தாக்கியுள்ளனர்.

கச்சாய் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த 17வயதான கந்தசாமி கஜதீபன் தலையில் பலத்த காயத்துக்கு இலக்கான நிலையிலும், சாவகச்சேரியைச் சேர்ந்த 53வயதான சின்னத்தம்பி துரைசிங்கம் தலையில் பலமாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## ஜனா...

செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த செய்தி சரியானது எனவும், செய்தியை வழங்கிய பெண் செய்தியாளருக்கு ஆதரவாக நிற்கப் போவதாகவும் ராம் அறிவித்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால இது பற்றி கூறியதாகத் தெரிவித்து செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், ஜனாதிபதி அவ்வாறு எதனையும் கூறவில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டதுடன், அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ணவும் அதனை மறுத்திருந்தார்.

சுயாதீனமான பல்வேறு செய்தி மூலங்களின் ஊடாக இந்த செய்தியை உறுதி செய்த பின்னரே பிரசுரம் செய்தாகவும் இதனால் செய்தியில் எவ்வித பிழையும் கிடையாது எனவும்

23


கட்டார் வேலைவாய்ப்பு
எலக்ரீஷியன், பிளம்பர், மெக்கானிக், டிரைவர், A/C டெக்னீஷியன், Waiter, Office Boy/Girls
Emerald Isle Manpower & Travel Services The Srilankan Recruitment Specialists License No. 2268
ஆரம்பக் கட்டணம் இல்லை பதிவுக் கட்டணம் ரூ 2007/- மட்டுமே
077 00 38 215 021 221 9 221
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-4159)
221-1/1, மின்சார நிலைய வீதி. 2ம் ஒழுங்கை. யாழ்ப்பாணம்
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03.11.18 சனி 8 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி 0762 669 614 ஆரம்பம் :05.11.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-4108)

அமெரிக்க லொத்தர் விசா

2020-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம். (18 வயதுக்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)
2002-ம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சேவையினூடாக 100க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிர்ஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்
தொடர்புகளுக்கு: 077 755 4528/ 070 375 0001-7
திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட் 321, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (6121)
திருநெல்வேலி, நெல்லியடி, முல்லைத்தீவு

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
நிறஞ்சன் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை த்ந்து வாங்கப்படும்.
தொடர்பு:
நிறஞ்சன் நகைமாடம் சந்தை வீதி, உடுப்பிட்டி. 0763836129
(C-4126)

O/L சித்தியடையவில்லையா???
வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்தில் இணைய புதிய வாய்ப்புக்கள். யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய எமது கிளைகளுக்கு 20 உயர் பதவி வெற்றிடங்களும் 40 பேர்களுக்கு பதவி வெற்றிடங்களும் உள்ளன. நேர்முகத் தெரிவின் மூலம் பதவிகள் தெரிவு செய்யப்படும்.
- 18-35 வயதிற்குட்பட்டவர்கள்
- முன் அனுபவம் அவசியமில்லை
- தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தங்குமிடவசதிகள் மற்றும் மருத்துவ வசதிகள் செய்துகொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 077 552 8534
(6114)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா- 900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-4108)

வீட்டுவேலைக்கு ஆள்தேவை
சிறிய குடும்பத்தை பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை. வயது 40 - 50, சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 076 863 8011
(C-4191)

பணிநிலை வேண்டுகை
எமது நிறுவனத்திற்கு கணினி தட்டெழுத்தாளர் டிசைனர் (பெண்) தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும், பயிலுநர்களும் 21.10.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 12.00 மணிக்கு இடையில் நேரில் வரவும்.
சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ் பலாலி வீதி, கோண்டாவில்.
தொ.பே: 077 306 8982
(6119)

Maths & English Group Classes
தரம் 6,7,8,9,10 மற்றும் O/L மாணவர்களுக்கான கணித, ஆங்கில குழு ரீதியான, தனிப்பட்ட வகுப்புக்கள் (Tamil / English Medium) அனுபவமிக்க பிரபல பாடசாலை ஆசிரியரால் வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0774540529 (யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை)
விரைவில் இணுவில் புகையிரத வீதி அருகாமையில் வகுப்புக்கள் ஆரம்பம்.
(6102)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம்
UK - 550/=, France - 700/= Germany - 650/= Swiss - 750/= Canada - 950/=
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex SKYNET
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார். (6121)
3-5 Working Days

ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்
வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்திக்கு அருகில்.
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/ புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள்.
வவுனியா பண்டாரிக்குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் - வவுனியா)
தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்: 076 328 7119
(C-4190)

அமெரிக்க அதிஸ்ட விசா-
இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்
நீங்களும் அதிஸ்டசாலியாகலாம்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்
55000 இலவச விசாக்கள்
0768226243
கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற 60 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் பெற்று அலுவலகங்களில் பார்வையிடலாம்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.
2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

திருச்செல்வம்-மரியரோகினி அமெரிக்கா விசா வெற்றியாளர்
(C-4077)
இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை
V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0768226241 | 0768226230 | 0776697960 |

தேவை
பருத்தித்துறையில் இயங்கிவரும்
Sun Spicy
உயர்தர உணவகத்துக்கு உணவு பரிமாறுபவர், சமையலறை உதவியாளர் ஆகியோர் தேவை. ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
T.P: 0773151654, 0777046623
(C-4182)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.